Registered as a Newspaper | பக்கங்கள் 04 | விலை: ரூபா 5-00

# ஈழநாதம்

THE EELANAATHAM | Peoples Daily | மக்கள் தினசரி

நாதம் 04 | திருவள்ளுவர் ஆண்டு 2024 | ஆவணி 08 | [24-08-1993] | செவ்வாய்க்கிழமை | ஓசை 187

## எழுதுவினைஞர் நேர்முகப் பரீட்சை நடைபெறும் திகதிகள் அறிவிப்பு

எழுதுநர் சேவைக்கும் அதனோடு இணைந்த சேவைகளுக்கும் ஆட்சேர்ப்புச் செய்வதற்கான பொதுப் போட்டிப்பரீட்சையில் (1992) சித்தியடைந்து ஏற்கனவே நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்டுள்ள பரீட்சார்த்திகளுக்கு யாழ். செயலகத்தில் பிரதி மாவட்ட ஆணையாளர் அலுவலகத்தில் பின்வரும் திகதிகளில் நேர்முகப் பரீட்சைகள் நடைபெறுமென அறிவிக்கப்பட்டுள்ளது. மேற்படி நேர்முகப் பரீட்சை உதவி அரசாங்க அதிபர் பிரிவு ரீதியாக பின்வரும் திகதிகளில் காலை 9-00 மணிக்கு நடைபெறவுள்ளது. 24ஆம் திகதி யாழ்ப்பாணம் நல்லூர். 25ஆம் திகதி கோப்பாய், சங்கானை, உடுவில், தெல்லிப்பழை. 26ஆம் திகதி பருத்தித்துறை. 27ஆம் திகதி சாவகச்சேரி, வேலணை, ஊர்காவற்றுறை. 30ஆம் திகதி, கிளிநொச்சி மற்றும் ஏனைய பகுதிகளுக்கும் நடைபெறவுள்ளது.

# இராணுவத்திற்கு ஆள் திரட்டும் அரசாங்கத்தின் முயற்சி தோல்வி

## சலுகைகள் வழங்கியும் சிங்களவர் பின்னடிப்பு

[கொழும்பு]

சிறிலங்கா இராணுவத்திற்கு புதிதாக ஆட்களைத் திரட்டும் சிறிலங்கா அரசாங்கத்தின் முயற்சி தோல்விகண்டுள்ளது. இராணுவத்தில் சேருவதற்கான கல்வித்தகைமை, உயரம், வயது என்பனவற்றை அரசாங்கம் குறைத்திருந்த போதும், நூற்றுக்கும் சற்று அதிகமான சிங்கள இளைஞர்களே நேற்று சமுகம் அளித்திருந்ததாக பி. பி. ஸி. செய்தியாளர் லூசியன் கருணா நாயக்கா தெரிவித்துள்ளார்.

சிறிலங்கா இராணுவத்திற்கு ஆட்சேர்ப்பதற்காக நேற்று தென்னிலங்கையில் 21 இராணுவ ஆட்சேர்ப்பு நிலையங்களில் நடைபெற்ற நேர்முகப் பரீட்சைகளுக்கு நூற்றுக்கும் சற்று அதிகமான சிங்கள இளைஞர்களே சமுகம் அளித்திருந்ததாக லூசியன் ராஜ கருணநாயக்கா என்ற செய்தியாளர் பி. பி. ஸிக்கு தெரிவித்தார்.

இராணுவ ஆட்சேர்ப்பிற்காக இராணுவம் கல்வித்தகைமையையும் உயரம், வயது என்பவற்றையும் குறைத்திருந்தது. கல்வித்தகைமை 5 ஆம் வகுப்பாகவும் வயது 17 ஆகவும் உள்ளவர்கள் இராணுவத்தில் சேர முடியும் என இராணுவ ஆட்சேர்ப்பு பிரிவு அறிவித்திருந்தும் கூட, சிங்கள இளைஞர்கள் இராணுவத்தில் சேர முன்வராமை, புலிகளை எதிர்த்து போராட இராணுவத்தின் பலத்தை அதிகரிக்க முடியாமற் போய்விட்டது என்றும் அச்செய்தியாளர் சுட்டிக்காட்டினார்.

கொழும்பு இராணுவ ஆட்சேர்ப்பு நிலையத்தில் நண்பகல்வரை நூற்றுக்கும் சற்று கூடுதலான இளைஞர்களே வந்திருந்தனர். மாகாண நிலையங்களில் இருந்து கிடைத்த தகவல்கள் அங்கு இதற்கும் குறைவான இளைஞர்களே வந்ததாக கூறுகின்றது என்றும் லூசியன் ராஜகருண நாயக்கா குறிப்பிட்டார்.

இது குறித்து அவர் மேலும் குறிப்பிடுகையில் ஆள் பலம் அவசரமாக தேவைப்படும் இராணுவம் 10 காலாட்படை பிரிவுகளுக்கு சுமார் 2000 படையினரைச் சேர்க்க முயல்கிறது. சிறிலங்கா இராணுவத்தில் ஒருலட்சத்தி ஐயாயிரம் பேரை சேர்க்க முடியும். ஆனால் நிதி பற்றாக்குறையி

( 4 ஆம் பக்கம் பார்க்க )

## எறிகணைவீச்சு

(நமது நிருபர்)

காரைநகர் தம்பாட்டி பகுதியில் நிலை கொண்டிருக்கும் சிறிலங்கா இராணுவத்தினர் நேற்று முன்தினம் இரவு 10 40 மணியளவில் சுழிபுரம், பொன்னாலை சவுக்கடிப் பகுதியை நோக்கி எறிகணைத் தாக்குதலை நடத்தியுள்ளனர். இத்தாக்குதலின்போது ஏற்பட்ட சேதவிபரம் தெரியவில்லை.

## கொழும்பு விடுதியிலிருந்து 2 தமிழ் பெண்கள் கைது

(வவுனியா)

கொழும்பில் விடுதி ஒன்றில் தங்கியிருந்த இரு தமிழ்ப் பெண்கள் பொலிசாரால் கைது செய்யப்பட்டுள்ளனர். கைதான இப்பெண்கள் பொறளை மகசீன் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப் பட்டுள்ளனர்.

வல்வெட்டித்துறை மதவடியைச் சேர்ந்த மரகதம் (வயது 45). வல்வெட்டித்துறை ஆ கோயிலடியைச்சேர்ந்த ராதா (வயது 33) ஆகிய இரு பெண்களே பொலிசாரால் கைது செய்யப்பட்டவர்களாவர்.

இதேசமயம்வெள்ளவத்தை, கொட்டாஞ்சேனை பகுதிகளிலும் தமிழர்கள் பொலிசாரால் கைது செய்யப்படுவதாக தெரிவிக்கப்படுகிறது.

## படகு ஓட்டுநர்களுக்கு அடையாள அட்டைவழங்கல்

கிளாலி - பூநகரிக்கிடையிலான படகுச்சேவையில் ஈடுபட்டுள்ள படகு ஓட்டுநர்களுக்கு அடையாள அட்டை வழங்கப்படவுள்ளதால் சகல படகுத்துறைப் பொறுப்பாளர்கள், படகு உரிமையாளர்கள், ஓட்டுநர்கள் ஆகியோரை இன்று செவ்வாய்க்கிழமை காலை 9.00 மணிக்கு புலோப்பளை பயணிகள் படகுத்துறைச் செயலகத்திற்கு தவறாது வருகை தரும்படி யாழ். மாவட்ட வருவாய்ப் பொறுப்பாளர் கேட்டுள்ளார்.

வரும்போது படகுச் சேவையில் பாவிக்கப்படும் வெளி இணைப்பு இயந்திரங்கள், மற்றும் சகல உபகரணங்களையும் கொண்டுவரும்படி அவர் கேட்டுள்ளார்.

## கிளாலி - பூநகரி படகுச்சேவை

கிளாலி — பூநகரி படகுச் சேவை இன்று செவ்வாய்க்கிழமை வழமையான நேரத்திற்கு நடைபெறுமென யாழ். மாவட்ட வருவாய்ப்பொறுப்பாளர் அறிவித்துள்ளார்.

## கொழும்பு செல்லவிருக்கும் நோயாளர் கவனத்திற்கு

(குருநகர்)

விசேட வைத்திய சிகிச்சைக்காக கொழும்பு செல்வதற்குத் தெரிவு செய்யப்பட்ட நோயாளர்களும், அவர்களுடன் கூடச் செல்பவர்களும் எதிர்வரும் வியாழக்கிழமை காலை 7மணிக்கு யாழ். பொது வைத்திய சாலையில் சமுகம் அளிக்கும்படி வைத்திய சாலைப் பணிப்பாளர் கேட்டுள்ளார்.

இரண்டு நாள்களுக்குத் தேவையான உணவு மற்றும் தண்ணீர் வசதிகளுடனும் வருகை தரும்படி மேற்படி செய்திக்குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

## 3980 மெ. தொன் மாவுடன் 'வாதுவ' வந்தடைந்தது

[வடமராட்சி]

பருத்தித்துறை இறங்குதுறைக்கு 'வாதுவ' கப்பல் நேற்றுக்காலை 8·00 மணியளவில் வந்து சேர்ந்தது. இக்கப்பலில் 3980மெட்றிக்தொன் மா எடுத்து வரப்பட்டது. மேலும் இரசாயனப் பொருள்கள், அரச அதிபருக்கு நானா

( 4 ஆம் பக்கம் பார்க்க )

## வாதுவவில் தபால் பொதி; நாளை விநியோகம்

(யாழ்ப்பாணம்)

பருத்தித்துறை இறங்கு துறைக்கு நேற்று வந்துசேர்ந்த ''வாதுவ'' கப்பலில் யாழ் பிரதான தபாலகத்திற்கான 211 உள்ளூர் மற்றும் வெளியூர்த் தபால பொதிகள் எடுத்து வரப்பட்டுள்ளன.

இத்தபால் பொதிகள்

( 4 ஆம் பக்கம் பார்க்க )

## மண்கிண்டிமலை தோல்வி நிதி ஒதுக்கீட்டிற்கு காரணம்

(கொழும்பு)

தெரிவித்தார்.

ஜனகபுர முகாம் அழிக்கப்பட்

## தொண்டமனாறு மீது ஷெல் வீச்சு; ஒரே குடும்பத்தில் 2 பேர் பலி; 2 காயம்

ணுவ ஆட்சேர்ப்பு நிலையங்களில் நடைபெற்ற நேர்முகப் பரீட்சைகளுக்கு நூற்றுக்கும் சற்று அதிகமான சிங்கள இளைஞர்களே சமூகம் அளித்திருந்ததாக லூசியன் ராஜ கருணநாயக்கா என்ற செய்தியாளர் பி. பி. ஸிக்கு தெரிவித்தார்.

இராணுவ ஆட்சேர்ப்பிற்காக இராணுவம் கல்வித்தகைமையையும் உயரம், வயது என்பவற்றையும் குறைத்திருந்த வத்தில் சேர முடியும் என இராணுவ ஆட்சேர்ப்பு பிரிவு அறிவித்திருந்தும் கூட, சிங்கள இளைஞர்கள் இராணுவத்தில் சேர முன்வராமை, புலிகளை எதிர்த்து போராட இராணுவத்தின் பலத்தை அதிகரிக்க முடியாமற் போய்விட்டது என்றும் அச்செய்தியாளர் சுட்டிக்காட்டினார்.

கொழும்பு இராணுவ ஆட்சேர்ப்பு நிலையத்தில் நண்பகல்வரை நூற்றுக்கும் சற்று ... தகவல்கள் அங்கு இதற்கும் குறைவான இளைஞர்களே வந்ததாக கூறுகின்றது என்றும் லூசியன் ராஜகருணநாயக்கா குறிப்பிட்டார்.

இது குறித்து அவர் மேலும் குறிப்பிடுகையில் ஆள் பலம் அவசரமாக தேவைப்படும் இராணுவம் 10 காலாட்படை பிரிவுகளுக்கு சுமார் 2000 படையினரைச் சேர்க்க முயல்கிறது. சிறிலங்கா இராணுவத்தில் ஒருலட்சத்தி ஐயாயிரம்

# மண்கிண்டிமலை தோல்வி நிதி ஒதுக்கீட்டிற்கு காரணம்

(கொழும்பு)

விடுதலைப் புலிகள் கடந்த மாத இறுதியில் வெலிஓயாப் பகுதியில் ஜனகபுர சிறிலங்கா இராணுவ முகாமை தாக்கி அழித்ததைத் தொடர்ந்தே இராணுவத்தில் மேலும் ஆட்களை சேர்ப்பதற்கானநிதியை வழங்க சிறிலங்கா அரசு முன்வந்துள்ளதாக லூசியன் ராஜ கருணநாயக்கா பி.பி. ஸிக்கு தெரிவித்தார்.

இராணுவத்தின் இன்றைய பலம் 70,000. புலிகளை எதிர்த்து போரிட்டு தம்நிலையை பலப்படுத்த இன்னும் 33 ஆயிரம் படையினர் தேவை என அதிகாரிகள் அரசை மீண்டும் மீண்டும் கோரிவருகின்றனர். ஆனால் இதற்கான போதிய நிதிவளம் அரசிடம் இல்லை.

ஜனகபுர முகாம் அழிக்கப்பட்டதையடுத்தே இராணுவத்திற்கு நிதியுதவி அளிக்க அரசு முன்வந்தது.

இப்போது ஆட்சேர்ப்பிற்கு அரசின் நிதி கிடைத்த போதிலும் புலிகளுடன் போரிட ஆயுதம் தாங்க முன்வரும் இளைஞர்களை கண்டுபிடிப்பது இராணுவத்திற்கு பிரச்சினையாக உள்ளது.

# 10 ஆண்டில் 16,000 படையினரை சிங்கள இராணுவம் இழந்தது

(கொழும்பு)

சிறிலங்கா இராணுவம் கடந்த பத்து ஆண்டுகளாக இடம்பெற்றுவரும் போரில் 16,000 பேரை இழந்துள்ளது. 1983 ஆம் ஆண்டில் இருந்து இடம்பெற்ற இப் போரில், கடந்த மூன்று ஆண்டில் இடம்பெற்ற போரிலேயே மிகவும் உயர்ந்தளவிலான படையினரை சிறிலங்கா அரசாங்கம் இழந்துள்ளது. இதில் பல உயர் படைத்தளபதிகளும் அடங்குவர்.

இதேவேளை, இப்போரில் காயமடைந்த இராணுவத்தினரின் எண்ணிக்கை இதைவிட அதிகமாகும். இதில் அநேகர் அங்கவீனர்களாகவுள்ளனர்.

இதனைவிட பத்தாண்டுக் காலத்தில் இராணுவத்தில் இருந்து ஓடியவர்கள் தொகையும், இறந்த படையினரின் தொகை அளவில் இருப்பதாக நம்பகரமாகத் தெரியவருகின்றது.

# மண்கிண்டிமலை மாதிரி அமைப்பு இன்று மக்கள் பார்வையிடலாம்

தமிழீழ விடுதலைப் புலிகளினால் மண்கிண்டிமலை இராணுவ முகாம் தகர்க்கப்பட்ட வெற்றி நாளையொட்டி ஜனகபுர சிங்கள குடியேற்றம் மண்கிண்டிமலை இராணுவ முகாம் அவற்றை போராளிகள் தாக்கி அழிக்கும் காட்சி என்பவற்றை உள்ளடக்கிய மாதிரி அமைப்பொன்று ஆனைக்கோட்டைப் பகுதியில் அமைக்கப்பட்டுள்ளது.

இவ்அமைப்பை இன்று முதல் மூன்று தினங்களுக்கு பொது மக்கள் பார்வையிடவும் ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. ஆனைக்கோட்டை கோம்பையன் மணல் மயானத்தினையும் அதனை சூழவுள்ள வயல் பகுதியையும் உள்ளடக்கி இம் மாதிரி அமைப்பு உருவாக்கப்பட்டுள்ளது.

கோம்பையன் மணல் மயானப் பகுதி மண்கிண்டி இராணுவ முகாமாகவும், அதற்கு அண்மித்த வயற்பகுதி ஜனகபுர குடியேற்றப் பகுதியாகவும், முன்னாலுள்ள வயற்பகுதியிலிருந்து போராளிகள் தாக்குதல் நடத்தும் பகுதியாகவும், பெரிய அளவில் இம் மாதிரி அமைப்பு உருவாக்கப்பட்டுள்ளது. முகாம் குடியேற்றம் என்பவற்றைச் சூழவுள்ள பகுதிகளில் பாரிய காவலரண்கள் அமைக்கப்பட்டுள்ளன. இராணுவமுகாம் அமைக்கப்பட்டமயானப்பகுதியினுள் நுழைவாயிலில் ''மணலாற்றை நாம் இழக்க முடியாது அது நிலம் மட்டுமல்ல அதற்கு தீதான் தமிழ் தேசியத்தின் இதயமும் உள்ளது'' என்ற வாசகம் பொறிக்கப்பட்ட பதாகை கட்டப்பட்டுள்ளது.

ஒரு மண்டபத்தில் மணலாற்றுப் பகுதியில் இடம்பெற்ற மோதல்களில் வீரச்சாவடைந்த 100க்கு மேற்பட்ட போராளிகளின் படங்களும், ஜனகபுர குடியேற்றத் திட்டத்தின் வரலாறு, கொக்கிளாய் தாக்குதல், 'மின்னல் அடி' சமர் என்பன குறித்த குறிப்புகளும் பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளன.

( 4 ஆம் பக்கம் பார்க்க )

# கொழும்பு விடுதியிலிருந்து 2 தமிழ் பெண்கள் கைது

(வவுனியா)

கொழும்பில் விடுதி ஒன்றில் தங்கியிருந்த இரு தமிழ்ப் பெண்கள் பொலிசாரால் கைது செய்யப்பட்டுள்ளனர். கைதான இப்பெண்கள் பொறளை மகசின் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

வல்வெட்டித்துறை மதவடியைச் சேர்ந்த மரகதம் (வயது 45). வல்வெட்டித்துறை ஆ கோயிலடியைச்சேர்ந்த ராதா (வயது 33) ஆகிய இரு பெண்களே பொலிசாரால் கைது செய்யப்பட்டவர்களாவர்.

இதேசமயம்வெள்ளவத்தை, கொட்டாஞ்சேனை பகுதிகளிலும் தமிழர்கள் பொலிசாரால் கைது செய்யப்படுவதாக தெரிவிக்கப்படுகிறது.

# 3980 மெ. தொன் மாவுடன் 'வாதுவ' வந்தடைந்தது

[வடமராட்சி]

பருத்தித்துறை இறங்குதுறைக்கு 'வாதுவ' கப்பல் நேற்றுக்காலை 8·00 மணியளவில் வந்து சேர்ந்தது. இக்கப்பலில் 3980 மெட்றிக்தொன் மா எடுத்து வரப்பட்டது. மேலும் இரசாயனப் பொருள்கள், அரச அதிபருக்கு நானா

( 4 ஆம் பக்கம் பார்க்க )

## வாதுவவில் தபால் பொதி; நாளை விநியோகம்

(யாழ்ப்பாணம்)

பருத்தித்துறை இறங்குதுறைக்கு நேற்று வந்துசேர்ந்த ''வாதுவ'' கப்பலில் யாழ் பிரதான தபாலகத்திற்கான 211 உள்ளூர் மற்றும் வெளியூர்த் தபால பொதிகள் எடுத்து வரப்பட்டுள்ளன.

இத்தபால் பொதிகள்

( 4 ஆம் பக்கம் பார்க்க )

# தொண்டமனாறு மீது ஷெல் வீச்சு; ஒரே குடும்பத்தில் 2 பேர் பலி; 2 காயம்

(வடமராட்சி)

பலாலி சிறிலங்கா இராணுவ முகாமிலிருந்து நேற்று மாலை ஏவப்பட்ட ஆட்லறி எறிகணைகள் தொண்டமனாறு பகுதியில் வீழ்ந்து வெடித்ததில் இரண்டு சிறுவர்கள் ஸ்தலத்திலேயே பலியாகினர். மேலும் இரு சிறுவர்கள் உட்பட மூவர் காயமடைந்தனர்.

மாலை 4 மணியளவில் காட்டுப்புலம் பகுதியில் வீட்டில் விளையாடிக்கொண்டிருந்த சிறுவர்கள் மத்தியில் ஆட்லறி ஷெல் ஒன்று வீழ்ந்து வெடித்ததால் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த இரு சிறுவர்கள் பலியாகினர். அதே குடும்பத்தைச் சேர்ந்த மேலும் இரு சிறுவர்கள் படுகாயமடைந்து பருத்தித்துறை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர்.

இச்சம்பவத்தின்போது மகாலிங்கம் கமலாதேவி (10) மகாலிங்கம் வாசுகி (06) ஆகியோரே பலியாகியவர்கள் ஆவர். மேலும் மகாலிங்கம் அபிராமி (04), மகாலிங்கம் கண்ணன் (03) ஆகியோர் காயமடைந்தனர். இவர்கள் இருந்தவீடும் சேதமடைந்தது.

இப்பகுதியில் மேலும் இரண்டு ஷெல்கள் வீழ்ந்து வெடித்ததில் பா. பாலச்சந்திரன் என்பவர் காயமடைந்தார். இரு வீடுகள் சேதமடைந்தன. (யோ)

## ஒளி வீச்சு காண்பிக்கப்படும்

நிதர்சன யூலை மாத வெளியீடான ஒளிவீச்சு வீடியோ சஞ்சிகை இன்று மாலை 4 மணிக்கு நிதர்சனம் அமலன் அரங்கில் காண்பிக்கப்படும். ஆர்வலர்கள் அழைக்கப்படுகின்றனர்.

## 6 பேர் தடுத்துவைப்பு

தடைசெய்யப்பட்டபொருள்களை எடுத்து வந்த ஆறு பேர் இராணுவத்தினரால் தடுத்து வைக்கப்பட்டு மன்னார் வீதியால் அனுப்பப்பட்டனர்.

ஒட்டிசுட்டானைச் சேர்ந்த காத்தான் மணிவாசகம், கிளிநொச்சியைச் சேர்ந்த சிவகுரு இராசன் ஆகியோர் உட்பட ஆறுபேரே இவ்வாறு தடுத்து வைக்கப்பட்டவர்களாவர்.

# இரத்த வெள்ளத்தில் பிள்ளைகள் துடிதுடித்துக் கொண்டிருந்தனர்

## பிள்ளைகளை இழந்த தாய் விபரிப்பு

(வடமராட்சி)

''எனது கணவரின் மாசிகத்துக்கு உறவினர் வீட்டுக்கு சென்று திரும்பிய போது எனது பிள்ளைகள் இரத்த வெள்ளத்தில் துடிதுடித்துக் கொண்டிருப்பதைக் கண்டு பதைபதைத்து ஓடினேன்''. இவ்வாறு நேற்று மாலை பலாலி இராணுவ முகாமிலிருந்து ஏவப்பட்ட ஆட்லறி எறிகணைக்கு தனது இரு பிள்ளைகளைப் பறிகொடுத்த பெண்மணி எமது வடமராட்சிச் செய்தியாளருக்கு தாளாத துயருடன் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கும் போது ''நான் எனது கணவரின் மாசிய விரதத்தை உறவினர் வீட்டில் செய்து முடித்துவிட்டு பிள்ளைகளுக்கு உணவு எடுத்துக்கொண்டு வந்திருந்த வேளையில் ஷெல் பட்டு எனது நான்கு பிள்ளைகளும் இரத்த வெள்ளத்தில் துடிதுடித்தவாறு கிடந்தனர்.''

''பதைபதைத்த நான் பிள்ளைகளை அணுகிய போது இரு மூத்தபிள்ளைகளும் இறந்துகிடந்தனர். மற்றைய இருவரும் உயிருக்காக போராடிக் கொண்டிருந்தனர்.''

''அயலவர்களாலும் பருத்தித்துறை செஞ்சிலுவை சங்கத்தினராலும் காயமடைந்த பிள்ளைகள் வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டனர்.''

''நாங்கள் இராணுவ நடவடிக்கைகளால் இடம்பெயர்ந்து இங்கு வந்து இருந்தோம். இங்கும் எமக்கு சோதனைக்களமாக மாறிவிட்டது. எனக்கு எனது பிள்ளைகள் தான் ஆதரவு. இப்போது தனிமரமாகி விட்டேன்'' என்றார். (யோ)

## கிளாலி ஷெல் தாக்குதலில் பலியானோர் விபரம்

(தென்மராட்சி)

கிளாலி பகுதியில் நேற்று முன்தினம் இடம்பெற்ற எறிகணைத்தாக்குதலில் பண்டிதர் குடியிருப்பைச் சேர்ந்த ஜே. நகுலேஸ்வரி (வயது35) மோகனகுமார் தவராசா (வயது4) ஆகியோர் பலியாகினர். இதே வேளை அதேயிடத்தைச் சேர்ந்த கனகசபை கனகலிங்கம் (வயது30) என்பவர் ஷெல் தாக்குதலால்ஏற்பட்ட அதிர்ச்சியினால் மரணமானார்.

மேலும் கிளாலியைச்சேர்ந்த பாலன் என்பவர் காயமடைந்தார். மேலும்பலர் காயமடைந்து சிகிச்சை பெற்றனர். (86)

## முள்ளிக்குளம் பகுதியில் புக்காரா குண்டு வீச்சு

(மன்னார்)

மன்னார் முள்ளிக்குளம் பகுதியில் நேற்றுக் காலை இரு புக்காரா விமானங்கள் குண்டு வீச்சு தாக்குதலை நடாத்தியுள்ளன. காலை 10. 00 மணியளவில் மேற்கொள்ளப்பட்ட இத் தாக்குதலின் போது 5க்கு மேற்பட்ட குண்டுகள் வீசப்பட்டுள்ளன.

முள்ளிக்குள கடற்கரைப் பகுதியிலும் இக் குண்டு வீச்சு இடம்பெற்றுள்ளது.

மன்னார் மாவட்டத்தின் பல பகுதிகளிலும் தற்போது புக்காரா விமானங்கள் குண்டு வீச்சுத் தாக்குதலை நடாத்தி வருவது குறிப்பிடத்தக்கது.

## வரி விளம்பரம்

### புலோலியில் நீமியா உரம்

பண்வளம் பெருக்கிப் பயிர் பாதுகாப்பும் தருவது 'நீமியா உரம்'' வேப்பம் பிண்ணாக்கை ஆதாரமாகக்கொண்டது. கிலோ பக்கற் ஒன்று ரூபா 18/- வடமராட்சியில் புலோலி சுமநல சேவை நிலையத்தில் விற்பனையாகிறது. மில்க் வைற்'' (சி/7234)

### தேவை

சரசாலை கலைமகள் கல்வி நிலையத்திற்கு எழுதுவினைஞர் தேவை G.C.E(O/L) சித்தியடைந்தவர்கள் விண்ணப்பங்களை கலைமகள் கல்வி நிலையம் சரசாலை என்ற முகவரிக்கு நேரிலோ அல்லது கடித மூலமோ 10-9-93 க்கு முன் அனுப்பி வைக்கவும் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம். [5714]

### கொத்தணி அதிபர்கள் கூட்டம்

நாளை புதன்கிழமை காலை நிகழவிருந்த பண்டத்தரிப்பு கல்விக் கோட்ட கொத்தணி அதிபர்கள்கூட்டம் 27-ம் திகதி வெள்ளிக்கிழமை காலை 9.00 மணிக்கு மானிப்பாய் இந்துக் கல்லூரியில் நடைபெறுமெனக் கோட்டப்பிரதிக் கல்விப்பணிப்பாளர் அறிவித்துள்ளார்.

### ஆலய உற்சவம்

(குருநகர்)

யாழ் குருநகர்-புனித ஆரோக்கிய நாதர் ஆலய வருடாந்த திருநாள் நேற்றுமுன்தினம் மாலை 4 மணியளவில் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து நடைபெற்று வருகின்றது. (21)

### யோகாசனக் கருத்தரங்கு

திவ்ய ஜீவன சங்க மண்டபத்தல் எதிர்வரும் ஞாயிறன்று மாலை மூன்று மணியளவில் யோகாசனம் பற்றிய கருத்தரங்கு ஒன்று நடைபெறவுள்ளது இக் கருத்தரங்கில் யோகிராஜன் மற்றும் க.ரவீந்திரன் ஆகியோர் கலந்து கொண்டு கருத்துரை வழங்கவுள்ளனர்.

### முதலாவது ஆண்டு விழா

வீரபத்திரர் சனசமூக நிலையத்தின் முதலாவது ஆண்டு விழா நாளை ஆலங்கட்டை வீதி வீரபத்திர ஆலய முன்ற

## சிங்கள குடியிருப்புகளுக்கு மேலதிக இராணுவம்

அம்பாறை மாவட்டத்தில் தமிழ்ப் பகுதிகளுக்கு அண்மையில் உள்ள சிங்களக் குடியிருப்புகளுக்கு கூடுதல் இராணுவத்தினர் அனுப்பப்பட்டுள்ளதாகவும் படையினர் உசார்ப்படுத்தப்பட்டுள்ளதாகவும் அம்பாறை இராணுவத் தலைமையகத்தைச் சேர்ந்த மேஜர் ரணவீர கூறியுள்ளார்.

நுரைச்சோலை சிங்களக் குடியேற்ற கிராமத்தில் ஆயுதபாணிகள் சிலர் நடமாடியதைக் கண்டதாக அவ்வூரவர்கள் சிலர் கூறியதை அடுத்து இக் குடியிருப்புகளுக்கு மேலதிக படையினர் அனுப்பப்பட்டதாக அவர் மேலும் தெரிவித்தார்.

## 1ம் ஆண்டு நினைவஞ்சலி



### தியோனிஸ் அலெக்சான்டர்

[பலாலி]

உந்தனின் வெயர்வை ஈந்து நாம்
உலகமதில் உயர்வாய் வாழ
ஆனவகை செய்த ஐயாவே உனை
உலகம் உள்ளஅளவும் நாம் மறவோம்.

இவரின் ஆன்ம இளைப்பாற்றிற்காக மானிப்பாய் புனித அந்தோனியார் ஆலயத்தில் இன்று 24-08-93 காலை 6-30 மணிக்கும் பருத்தித்துறை கலட்டி புனித அந்தோனியார் ஆலயத்தில் மாலை 5.00 மணிக்கும் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்படும்.

இவரின் பிரிவை என்றுமே எண்ணி ஏங்கும்
மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.

தகவல்:
மகன்: அ. அந்தோனிப்பிள்ளை
தும்பளை.

(5748)

## 2-ம் ஆண்டு நினைவஞ்சலி



## கிளிநொச்சி மாவட்டத்தில் நிலவும் கடும் வரட்சி

[யாழ்ப்பாணம்]

கிளிநொச்சி மாவட்டத்தில் கடும் வரட்சி நிலவுவதால் மக்கள் பெரிதும் கஷ்டமடைந்துள்ளனர் என்று அங்கிருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன.

குடிப்பதற்கு, குளிப்பதற்கு நீரின்றி மக்கள் பல மைல் தூரம் சென்று அருமையாக உள்ள நீர்நிலைகளில் தமது தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்கின்றனர் என்று அறிய வருகிறது.

சிறிய குளங்கள், கிணறுகள் மற்றும் நீர் நிலைகள் அநேகமானவை நீர் வற்றி வரண்டு போய்க் காட்சியளிக்கிறது.

கிளிநொச்சி நகர மக்களில் பெரும்பாலானோர் கிளிநொச்சிக் குளத்திலேயே தமது குளிப்புத் தேவையைப் பூர்த்தி செய்கின்றனர்.


பல கிணறுகளில் மிக ஆழத்திலேயே தண்ணீர் உள்ளது என்றும் அறியப்பட்டது.

இதேசமயம் கிளிநொச்சி மாவட்டத்தில் நீண்ட நாட்கள் மழை பெய்யாத காரணத்தினால் இந்தக் கடும் வரட்சி ஏற்பட்டுள்ளது.

இதனால் விவசாய பயிர்ச் செய்கை நடவடிக்கைகளும் பாதிப்படைந்துள்ளன என்று அங்கிருந்து வரும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

(தி), (பா)

## 31-ம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



### தம்பையா சின்னத்தம்பி

தோற்றம்: 1922-02-23 மறைவு: 1993-07-25

சின்னண்ணா என்று செல்லமாக அழைக்க - புன்
சிரிப்புடன் பூரித்து வரவேற்று
சொன்ன மொழிகள் எம்மனதில் - கண்ணீர் மழை
சொரியச் செய்து கொண்டேயிருக்கும்.

## புழுக்கொடியல் மாவிலிருந்து இனிப்பு பண்டம் அறிமுகம்

தமிழீழத்தின் முக்கிய வளமான பனையின் பயன்பாடுகளில் ஒன்றான புழுக்கொடியல் மாவிலிருந்து தயாரிக்கப்பட்ட புதியதோர் இனிப்புப் பண்டம் ஒன்றினை தமிழீழ பொருண்மிய மேம்பாட்டுக் கழக உணவு பதனிடல் பகுதியினர் நல்லூர் உற்சவகால கண்காட்சியின் போது மக்கள் மத்தியிலே அறிமுகப்படுத்தியிருந்தனர்.

பரீட்சார்த்தமாக தயாரிக்கப்பட்ட இந்தச் சுவையான புழுக்கொடியல் மா இனிப்புப் பண்டம் கண்காட்சியினை பார்வையிட வந்திருந்த பெருந்தொகை மக்களுக்கு விநியோகிக்கப்பட்டது. பனை வளத்தினுடைய பயன்பாட்டினை மக்கள் மத்தியிலே அறிமுகப்படுத்தும் நோக்குடனேயே புழுக்கொடியல் மாவிலிருந்து தயாரிக்கப்பட்ட இனிப்புப்பண்டம் விநியோகிக்கப்பட்டது இங்கு குறிப்பிடத்தக்கது.

புதிதாக தயாரிக்கப்பட்ட இனிப்புப் பண்டம் மக்களுக்கு விநியோகிக்கப்பட்டதோடு அது தொடர்பான செய்முறை விளக்கம் அடங்கிய துண்டுப் பிரசுரம் ஒன்றும் மக்களுக்கு விநியோகிக்கப்பட்டது.

## கண்காட்சி நடத்த கோட்டங்களுக்கு நிதி

உடற்பயிற்சி, மெய்வல்லுநர் போட்டிகள் தவிர்ந்த ஏனைய கண்காட்சிகளையும் காட்சிப்படுத்தல் நிகழ்ச்சிகளையும் கோட்டங்கள் ரீதியாக நடத்துவதற்கு யாழ் பிரதேச கல்விப்பணிப்பாளரினால் ஒவ்வொரு கோட்டக் கல்வி அலுவலகங்களுக்கும் நிதிஒதுக்கீடுகள் செய்யப்பட்டுள்ளன.

இந்நிகழ்ச்சிகளை இவ்வாண்டு நடாத்துவதற்கு உதவியாக வேலணைக் கல்விக் கோட்டத்திற்கு ரூபா 3000/-மும் பருத்தித்துறை கல்விக் கோட்டத்திற்கு ரூபா 4000/-மும், யாழ் கல்விக் கோட்டத்திற்கு ரூபா 4000/-மும் மருதனாமடம் கல்விக்கோட்டத்திற்கு ரூபா 5000/-மும் சாவகச்சேரி கல்விக் கோட்டத்திற்கு ரூபா 3000/-மும் பண்டத்தரிப்பு கல்விக்கோட்டத்திற்கு ரூபா 5000/-மும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. (17)

## நெசவு உற்பத்தியாளர்கள் தொடர்பு கொள்ளவும்

தற்போதைய போர்க்காலச் சூழ்நிலையில் நூல் கிடைக்காமையால் நெசவு உற்பத்தியாளர்கள் தமது உற்பத்திகளை மேற்கொள்ள முடியாது இன்னல்களை அனுபவித்துக் கொண்டு வருகின்றனர் இந்த நிலையை போக்கும் நோக்குடன் உற்பத்தியினை மேற்கொள்வதற்கு தேவையான நூல்களையும் ஏனைய உபகரணங்களையும் பெற்றுத் தருவதற்கேற்ப நடவடிக்கைகளை தொழில் துறை மேம்பாட்டு நிறுவனம் துரிதமாக மேற்கொண்டு வருகிறது.

மேற்படி உதவிகளைப்பெற்றுக் கொள்ள விரும்பும் நெசவு உற்பத்தியாளர்கள் எதிர்வரும் 31ம் திகதிக்கு முன்னர் தொழில்துறை மேம்பாட்டு நிறுவனத்துடன் தொடர்புகொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

### பற்சிகிச்சை மீண்டும் ஆரம்பம்

சுமார் ஒரு மாதமாக இயங்காதிருந்த மந்திகை வைத்தியசாலை பற்சிகிச்சை கிளினிக் அண்மையில் மீண்டும் ஆரம்பமாகியுள்ளது.

இங்கு பணிபுரியும்டாக்டர் லீவில் சென்றமையே மூடப்பட்டதற்குக் காரணமெனத் தெரியவருகிறது (30)

## நினைவு கூருகின்றோம்... 1993-08-24

1984ஆம் ஆண்டு இதே தினத்தில் மன்னாரில் சிறிலங்கா இராணுவத்தினரால் சுடடுக் கொல்லப்பட்ட பலநோக்குக் கூட்டுறவுச்சங்க அலுவலரான தமிழ்ப்பொது மகன்.

1986ஆம் ஆண்டு இந்தியாவில் பயிற்சி முகாமில் தவறுதலாக நடந்த துப்பாக்கிச் சூட்டில் எமைப்பிரிந்த பசில் (வேலுப்பிள்ளை அருட்செல்வம் - சுப்பர்மடம் - பருத்தித்துறை)

க்கிய நாதர் ஆலய வருடாந்த திருநாள் நேற்றுமுன்தினம் மாலை 4 மணியளவில் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து நடைபெற்று வருகின்றது. (21)

## யோகாசனக் கருத்தரங்கு

திவ்ய ஜீவன சங்க மண்டபத்தில் எதிர்வரும் ஞாயிறன்று மாலை மூன்று மணியளவில் யோகாசனம் பற்றிய கருத்தரங்கு ஒன்று நடைபெறவுள்ளது. இக் கருத்தரங்கில் யோகிராஜன் மற்றும் க.ரவீந்திரன் ஆகியோர் கலந்து கொண்டு கருத்துரை வழங்கவுள்ளனர்.

## முதலாவது ஆண்டு விழா

வீரபத்திரர் சனசமூக நிலையத்தின் முதலாவது ஆண்டு விழா நாளை ஆலங்கட்டை வீதி வீரபத்திர ஆலய முன்றலில் பிற்பகல் ஆறு மணியளவில் நடைபெறவுள்ளது. நிலையத் தலைவர் சிறிஸ்கந்தராசா தலைமையில் நடைபெறும் இவ்விழாவில் டாக்டர் நவநீதன் செ. சிறீனிவாசன் ஆகியோர் பிரதம விருந்தினர்களாகவும், வ. செல்வராஜா, கா. சி மகேந்திரராசா கவிஞர் மு வேயோ வாஞ்சிநாதன், வைந்தமிழன் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகவும் கலந்து கொள்ளவுள்ளனர் பட்டிமன்றமும் கலை நிகழ்ச்சிகளும் நடைபெறவுள்ளன.

## உதவிப்பணக் கொடுப்பனவு

(யாழ்ப்பாணம்)

புங்குடுதீவுப் பகுதியைச் சேர்ந்த பொதுசன மாதாந்த உதவிப்பணம் பெறுவோருக்கான 1993 ஜனவரி தொடக்கம் யூலை வரையிலான ஏழுமாத காலக் கொடுப்பனவுகள் தற்போது பிரதான வீதியில் அமைந்துள்ள யாழ் பிரதம தபாலகத்தில் இயங்கி வரும் புங்குடுதீவுப்பிரிவு தபாலகத்தில் வழங்கப்பட்டு வருவதாக மேற்படி தபாலக வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. [22]

## பாம்பு தீண்டியது

முட்டைப் பெட்டிக்குள் கை வைத்த சிறுவனுக்கு அரவம் தீண்டியது.

மீசாலை வடக்கு கொடிகாமத்தைச் சேர்ந்த எஸ் அகிலன் [12] வயது என்னும் சிறுவன் வீட்டில் இருந்த முட்டைப் பெட்டியில் கையை வைத்து முட்டை எடுத்த போது அதற்குள் இருந்த அரவம் அவரின் கையில் தீண்டியுள்ளது.

இச்சம்பவம் கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்றது. மேற்படி சிறுவன் தற்போது மயக்கம் தெளிந்த நிலையில் சாவகச்சேரி மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகின்றார். [86]

---

ஒ புக் கொடுக்கப்படும்.


இவரின் பிரிவை என்றுமே எண்ணி ஏங்கும்
மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.

தகவல்:
தும்பளை. மகன்: அ. அந்தோனிப்பிள்ளை

(5748)

---

# 2-ம் ஆண்டு நினைவஞ்சலி



## லெப். டொமினிக் மாஸ்ரர்

நடேசன் குமரேசன்
(யாழ். இந்து உயர்தர மாணவன்)
திதி: 24 08-1993

தோற்றம் 21-04-1972 — வீரச்சாவு 16-09-1991

நேசம் பொங்கிட நேர் குமரேசனும்
தேயம் போற்றிடக் கல்வியைத் தேடிப்பின்
தாயின் மானங் காத்திடுந் தனயனாய்
பாயும் வேங்கைகள் கூட்டத்திற் புக்கனன்.

நல்ல கல்வியை நாடியே இந்துவில்
வல்லனாகக் கற்றபின் வாய்ந்த போரி
எல்லை மீட்கவென்றே மணலாறு புக்
கொல்லை நீசரை ஓட்டி விரட்டினான்.

வீரம் மிக்க விறல் மணலாற்றுமர்
தீரம் காட்டிய சீர்குமரேசனும்
போரில் இன்னுயிர் நீத்துப் புகழுடல்
சேரவே நின்றவன் சிந்தை மறக்குமோ.

பாழியற்றிடும் பாதகர் மாண்டிட
வாழியெங்கள் மாவீரர் வலிமைசேர்
ஆழி போற்றமிழ் அன்னையும் வாழிய
வாழி வாழி பல்லாண்டுகள் வாழியே.

நன்றி:- யாழ் இந்து அதிபர், ஆசிரியர்கள்

மகனே! நீ மண்ணை விட்டு மறைந்து ஈராண்டுகள் சென்றாலும் உமது நினைவுகள், உணர்வுகள் எம்மை விட்டு என்றும் அகலாது இந்நாளில் உன்னை நினைத்து அஞ்சலி செய்கின்றோம்.

டொமினிக் வீதி,
நீர்வேலி.

- குடும்பத்தினர்

(5755)

---



## தம்பையா சின்னத்தம்பி

தோற்றம்: 1922-02-23 — மறைவு: 1993-07-25

சின்னண்ணா என்று செல்லமாக அழைக்க - புன்
சிரிப்புடன் பூரித்து வரவேற்று
சொன்ன மொழிகள் எம்மனதில் - கண்ணீர் மழை
சொரியச் செய்து கொண்டேயிருக்கும்.

'சுந்தர பதி'
இல. 11, சுவாமியார் வீதி,
கொழும்புத்துறை மேற்கு,
யாழ்ப்பாணம்.

மனைவி, மக்கள்,
மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

[சி-7189]

---

# அந்தியேட்டிக் கிரியை அழைப்பும் 31-ம் நாள் நினைவஞ்சலியும்



தோற்றம் 24. 03. 1929

மறைவு 25. 07. 1993

செல்வி
## வேலுப்பிள்ளை விசாலாட்சி அவர்கள்
(ஓய்வு பெற்ற நெசவு ஆசிரியை)

பெற்ற தாயின் வழி நின்று எம்மை வளர்த்தெடுத்து வழிப்படுத்திய எம் குலவிளக்கே! உங்கள் ஆத்ம சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

நாளை (25. 8. 93) புதன்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் அந்தியேட்டியிலும் வீட்டுக்கிரியைகளிலும் பங்கு கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் யாவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

பிரிவால் துயருறும்
'முள்ளி'
கரணவாய் தெற்கு,
கரவெட்டி.
சகோதர[illegible], பெறாமக்கள்,
[illegible]ப்பிள்ளைகள்,
மருமக்கள்.

(3444)

---

கலையும் ஏனைய உபகரணங்களையும் பெற்றுத் தருவதற்கேற்ற நடவடிக்கைகளை தொழில்துறை மேம்பாட்டு நிறுவனம் துரிதமாக மேற்கொண்டு வருகிறது.

மேற்படி உதவிகளைப்பெற்றுக் கொள்ள விரும்பும் நெசவு உற்பத்தியாளர்கள் எதிர்வரும்

சுமார் ஒரு மாதமாக இயங்காதிருந்த மந்திகை வைத்தியசாலை பற்சிகிச்சை கிளினிக் அண்மையில் மீண்டும் ஆரம்பமாகியுள்ளது.

இங்கு பணிபுரியும் டாக்டர் லீவில் சென்றமையே மூடப்பட்டதற்குக் காரணமெனத் தெரியவருகிறது (30)

---

# நினைவு கூருகின்றோம்... 1993-08-24

1984ஆம் ஆண்டு இதே தினத்தில் மன்னாரில் சிறிலங்கா இராணுவத்தினரால் சுட்டுக் கொல்லப்பட்ட பலநோக்குக் கூட்டுறவுச்சங்க அலுவலகரான தமிழ்ப்பொதுமகன்.

1986ஆம் ஆண்டு இந்தியாவில் பயிற்சி முகாமில் தவறுதலாக நடந்த துப்பாக்கிச் சூட்டில் எமைப்பிரிந்த-
**பசில்** (வேலுப்பிள்ளை அருட்செல்வம் - சுப்பர்மடம் - பருத்தித்துறை)

யாழ்.- கோட்டையிலிருந்து சிறிலங்கா இராணுவத்தினர் ஏவிய எறிகணை நகர்ப்பகுதியிலுள்ள தனியார் வங்கியொன்றின் முன்னால் வீழ்ந்து வெடித்ததில் கொல்லப்பட்ட வங்கி முகாமையாளரான கோண்டாவில் மேற்கைச் சேர்ந்த தமிழ்ப் பொதுமகன்.

1988ஆம் ஆண்டு உரும்பராயில் தேசவிரோத சக்திகளினால் கொல்லப்பட்ட நாட்டுப்பற்றாளரான -
**எம். துரைராசா**

1990 ஆம் ஆண்டு முல்லைத்தீவில் சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரில் வீரச்சாவெய்திய -
**கைலாஸ்** (கனகசபாபதி லோகேந்திரா - 116/2, கச்சேரி ஒழுங்கை - அரியாலை - யாழ் )

இயக்கச்சியில் சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரில் வீரச்சாவெய்திய -
**குட்டி** (கனகசபை கிருபாகரன் - புலோப்பளை மேற்கு - பளை)

மட்டுநகரில் சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட நடவடிக்கைகளின்போது படுகொலை செய்யப்பட்ட மாணவனாகிய வந்தாறுமூலை பிரதான வீதியைச் சேர்ந்த தமிழிளைஞன் மியாங்குளம் பகுதியில் சிறிலங்கா விமானப்படையினர் மேற்கொண்ட விமானக் குண்டு வீச்சில் கொல்லப்பட்ட 03 தமிழர்கள்.

யாழ்ப்பாணத்தில் சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட எறிகணைத் தாக்குதல்களில் கொல்லப்பட்ட தாய், தந்தை, குழந்தைகள் ஆகிய ஆறுபேர். மற்றும் வண்ணார்பண்ணை மேற்கு ஆனைக்கோட்டைப் பகுதிகளில் கொல்லப்பட்ட இருவர் ஆகிய 08 தமிழர்கள்.

நாரந்தனை வடக்குப் பகுதியில் சிறிலங்கா முப்படையினரும் இணைந்து மேற்கொண்ட அகோரத்தாக்குதல்களின் போது கொல்லப்பட்ட 30 தமிழர்கள். மண்டைதீவில் சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட அட்டூழியங்களின் போது படுகொலை செய்யப்பட்ட கணவன், மனைவி, பெண் குழந்தை மற்றும் ஒரு சிறுமி, ஆசிரியை ஆகிய 05 தமிழர்கள்.

1992ஆம் ஆண்டு மணலாறு - அளம்பில் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரில் வீரச்சாவெய்திய -
**கப்டன் அன்பரசன் / அக்பர்** (திருச்செல்வம் சதீஸ்குமார் முறக்கொட்டாஞ்சேனை மட்டு)
**2ம்லெப். சுடர்** (கந்தசாமி கௌரீஸ்வரன் - காக்காச்சி வெட்டை - மண்டூர்)

ஆகியோரை இந்நாளில்
நினைவு கூருகின்றோம்.

**தமிழீழ விடுதலைப் புலிகள்**

(சி.7246)

மாநகராட்சி மன்றம் யாழ்ப்பாணம்

### சிந்தனைக்கு

நிமிர்ந்த முதுகெலும்பு இல்லாதவரை நினைத்தது நிறைவேறுமென கவை எலும்பைத் தொட்டு நயபுவதில் ஒரு பயனும் ஏற்படப் போவதில்லை.

\- வில் ஹென்றி

ஈழநாதம்

31, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம் 24-08-1993
தொலைபேசி
ஆசிரியபீடம் 025-2839 நிர்வாகபீடம் 2023
த. பெ. எண்-05

## 'கிரிமினல்'களைத் திரட்டும் சிங்கள அரசு

இராணுவத்தை விட்டுத் தப்பி ஓடியவர்களை மீண்டும் படையில் சேருமாறும், அவர்களுக்குத் தண்டனை ஏதும் வழங்கப்பட மாட்டாது எனவும் கூட்டுப்படை நடவடிக்கைத் தலைமை தளகர்த்தா ஜெனரல் ஹமில்டன் வனசிங்கா வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இதேவேளை, இராணுவத்தில் ஆட்களைச் சேர்த்துக் கொள்வதற்கான கல்வித்தகைமை எட்டாம் வகுப்பில் இருந்து ஐந்தாம் வகுப்பிற்குக் குறைக்கப்பட்டுள்ளதாகவும் நேற்றில் இருந்து எதிர்வரும் 28ஆம் திகதி வரை இடம்பெறவுள்ளதுமான இராணுவத்திற்கு ஆட்சேர்க்கும் நிலையங்களில் இக்கல்வித் தகைமையே கடைப்பிடிக்கப்படும் எனவும் இராணுவ ஆட்சேர்ப்புப் பிரிவு அறிவித்துள்ளது.

சிறிலங்கா அரசாங்கத்திற்கு ஏற்பட்டுள்ள இவ் அவல நிலையானது அவர்கள் எதிர்பார்த்ததொன்றல்ல புலிகளுக்கு எதிராக இளம் சிங்கங்கள் சீறி எழுவார்கள் என்றே அவர்கள் கனவுகண்டார்கள். சிங்கங்கள் சீறி எழும்போது புலிகள் ஒழிந்து கொண்டுவிடும் அல்லது ஒழிக்கப்பட்டுவிடும் என்றே அவர்கள் எண்ணினார்கள். அவர்களின் எண்ணம்போல் ஆரம்பத்தில் சிங்கங்கள் சீறி எழுந்தனதான். ஆனால், புலிகள் ஒழிக்கப்படவுமில்லை, ஒதுங்கிக் கொள்ளவுமில்லை. சிங்கங்கள் தான் புலிகளின் அதிரடிப் பாய்ச்சலுக்கு தாக்குப்பிடிக்க முடியாமல் தப்பி ஓடத்தொடங்கின.

இந்நிலையில். மீண்டும் சிங்கங்கள் களம் வர அஞ்சுகின்றன. சிந்திக்கத் தெரிந்த சிங்கங்கள் மோதலே வேண்டாம் என ஒதுங்கிக் கொள்ளத் தொடங்கி விட்டன. அதிர்ச்சி அடைந்த பேரினவாதமோ சலுகைகளைக் கொடுத்தும், ஆசைகளைக்காட்டியும் இராணுவத்திற்கு ஆள் திரட்டப் பார்க்கின்றது.

அரசாங்கத்தின் இன்றைய நிலையானது எவ்வாறேனும் இராணுவத்திற்கு ஆட்களைச் சேர்த்துக் கொண்டால் போதும் என்பதாகும். இவ்வாறு சேர்த்துக் கொள்ளப்படுபவர்களை வெடிப்பொருள்களையும், துப்பாக்கிகளையும் பயன்படுத்த பயிற்சி அளித்து விட்டு அவர்களைப் போர்முனைக்கு அனுப்புவதே அரசாங்கத்தின் முடிவாகும். அவ்வாறு இல்லாதுவிடின் இக்குறைந்த கல்வித்

# பில்கிளின்டனும் மத்திய கிழக்கும்; ஈரானை அச்சுறுத்தும் அமெரிக்கா!

ஜனாதிபதி பில் கிளின்டனின் நிருவாகத்தில் அமெரிக்க வெளிநாட்டுக் கொள்கை பெரும் குளறுபடியை தோற்றுவித்து வருகிறது. மத்திய கிழக்கு போன்ற பிரச்சினைக்குள்ளான பகுதியின் தொடர்பாக ஏற்கனவே கடைப்பிடிக்கப்பட்ட கொள்கைகள் இதனால் குழப்பத்துக்குள்ளாகின்றன.

அமெரிக்கா வெளிநாட்டு விவகாரங்களைப் பொறுத்தவரை பன்முகக் கொள்கையைப் பின்பற்றும் என்று கிளின்டன் நிருவாகத்தின் சிரேஷ்ட அதிகாரி ஒருவர் பத்திரிகையாளர்களுக்குக் கூறியதை அவதானிக்க முடிந்தது. 'நட்பு நாடுகள் பிராந்திய பிரச்சினைகளைத் தாங்களே தீர்த்துக் கொள்ள இது ஊக்குவிக்கும்' என்று அவர் கூறினார்.

இதன் பின்னர் ஈரானை அந்நியப்படுத்தும் முயற்சியில் மற்றுமொரு சிரேஷ்ட அதிகாரி நியூயோர்க் டைம்ஸ் பத்திரிகைக்கு அளித்த பேட்டியில் இதே கருத்து வலியுறுத்தப்பட்டது.

### அராஜக நாடு

இந்த வருட முற்பகுதியில் அமெரிக்க ராஜாங்க அமைச்சர் வரென் கிறிஸ்தோபர் ஈரானைச் சர்வதேச ரீதியில் ஓர் அராஜக நாடு என்று வர்ணித்தார். தெஹ்ரானுக்குக் கடன் வழங்கும நிறுவனங்களை அதைரியப்படுத்தும் தனது முயற்சியில் அது ஓர் அபாயகரமான நாடாக விளங்குகிறது என்றும் அவர் கூறினார்

தற்போது இந்த நிலைப்பாடு மேலும் கடுமையாக்கப்பட இருக்கிறது லிபியா, ஈராக் ஆகிய நாடுகளின் வரிசையில் ஈரானை ஓர் ஒழிந்த நாடாகக் கணிக்கும் முயற்சியே இதுவாகும். இதன் மூலம் ஈராக்கிற்கு எதிராக ஈரானை பயன்படுத்தும் முயற்சி கைவிடப்படுகிறது.

மத்திய கிழக்கு சமாதான பேச்சுவார்த்தைகளுக்கு குந்தகம் விளைவிக்கும் ஹமாஸ், ஹிஸ்புல்லா குழுக்களுக்கு ஈரான் ஆதரவு வழங்குகிறது என்ற உணர்விலேயே தற்போதைய அமெரிக்க கொள்கை தயாரிக்கப்பட்டுள்ளது.

லெபனானிலும் சூடானிலும் பயங்கரவாத பயிற்சி முகாம்களை நிறுவ இது உதவி வழங்கி உள்ளது அல்ஜீரியா, எகிப்து, ரீயூனீஸியா போன்ற நாடுகளில் ஆட்சிக்கு எதிராக கிளர்ச்சி செய்யும் குழுக்களுக்கும் ஈரான் உதவியுள்ளது. இராணுவ பலத்தை அதிகரிக்கும் திட்டம் ஒன்றை பொறுப்பேற்றுள்ள ஈரான் ஈற்றில் அணு ஆயுத உற்பத்தியை ஆரம்பிக்கும் நோக்கத்தையும் கொண்டுள்ளது.

உண்மை நிலை என்னவென்றால் அமெரிக்காவின் நட்பு நாடான இஸ்ரேல், ஈரான் உட்பட எந்தவொரு நாட்டிலும் பார்க்க கூடுதலாக ஹமாஸ் போன்ற குழுக்களை ஊக்குவிக்க அரும்பாடுபட்டுள்ளது. பலஸ்தீனர்களை பெருமளவில் நாடு கடத்துவதன் மூலமும் கைப்பற்றப்பட்ட பிரதேசங்களில் அடிக்கடி துப்பாக்கிப் பிரயோகம் செய்வதன் மூலமும் வீடுகளை குண்டு வைத்து தகர்ப்பதன் மூலமும் மனித உரிமைகளையும் ஜெனீவா உடன்படிக்கைகளையும் மீறுவதன் மூலமும் இஸ்ரேல் கைங்கரியத்தை செய்துள்ளது.

உண்மையில் ஹமாஸ் குழுவுக்கு ஈரான் நிதி அல்லது ஏனைய உதவிகளை வழங்குவதிலும் பார்க்க இஸ்ரேல் பலஸ்தீனர்களுக்கு எதை வழங்க முன் வருகிறது என்பதில் தான் தற்போதைய மத்திய கிழக்கு பேச்சுவார்த்தைகளின் வெற்றி தோல்வி தங்கி உள்ளது.

### ஆதாரம் இல்லை

மேலும் சூடானில் பயங்கரவாத பயிற்சி முகாம்களை ஈரான் நடத்திவருகிறது என்று எகிப்து திருப்பித் திருப்பி குற்றம்சாட்டி வருகின்ற போதிலும் இதனை நிரூபிக்க உறுதியான ஆதாரம் எதையும் இதுவரைமுன் வைக்கவில்லை.

இதற்கிடையில் லெபனானில் கடைசியாக இடம்பெற்ற பாராளுமன்ற தேர்தல்களில் பங்குபற்றிய ஹிஸ்புல்லாகுழு அத்தப் பிராந்தியத்தில் சமூக நல நடவடிக்கைகளில் பெரும் ஈடுபாடுடையது என்று பெயர் எடுத்துள்ளதே அன்றி பயங்கரவாதத்துடன் தொடர்புடையது என்று அது கருதப்படவில்லை.

தென் லெபனானில் இஸ்ரேலிய படைகளினால் கைப்பற்றப்பட்ட பகுதிகளில் இக்குழு மேற்கொண்ட இராணுவ நடவடிக்கைகள் பயங்கரவாதம் அல்ல தேசாபிமான நடவடிக்கைகளே என்று பெரும்பாலான அரபுநாடுகள் நம்புகின்றன.

அல்ஜீரியா எகிப்து ரீயூனிஸியா ஆகிய நாடுகளுக்கும் இவற்றின் இஸ்லாமிய எதிர்ப்பு நாடுகளுக்குமிடையிலான குழப்பம் முக்கியமாக ஒரு உள்ளூர் சுபாவமே அன்றி தெஹ்ரானின் செயலிலிருந்து தோன்றியதல்ல என்று பல அவதானிகள் கூறுகிறார்கள்.

### அரக்கனாக ஈரான்

அபரிதமான சமூக பொருளாதார பிரச்சினைகளை எதிர்நோக்கும் அரபு உலகில் ஆட்சியாளர்களுக்கு ஒரு அரக்கனாக ஈரான் விளங்கிவருகிறது என்று அரசியல் விமர்சகர்கள் கூறுகிறார்கள். அமெரிக்காவும் ஈரானைப் பற்றிய இந்தக் கணிப்பை ஏற்றுக் கொண்டுள்ளது.

1988 ஆகஸ்ட் மாதத்துடன் முடிவடைந்த ஈராக்குடனான நீண்ட யுத்தத்தில் மக்களையும் சொத்துக்களையும் பெருமளவில் இழந்த ஈரான் அதன் ஆயுதக் குதங்களை மீண்டும் கட்டியெழுப்ப வேண்டும் என்பது இயல்பானதே.

வாஷிங்டன் கூறுவதுபோல் இது ஒரு ஈரானின் இராணுவ எழுச்சி என்று வர்ணிப்பது மிகையானது என்று லண்டனில் ஆய்வாளர் ஒருவர் கருத்து வெளியிட்டுள்ளார்.

ஈரானின் ஒரு பெரல் எண்ணெய் 18 அமெரிக்க டொலராக ஒரு நிலையற்ற தன்மையில் உள்ளது. இவ்விதமான எண்ணெய் விலை வீழ்ச்சியினால் ஈரானின் வெளிநாட்டு சம்பாதியம் மட்டுப்படுத்தப்பட்டுள்ளது. எனவே ஈரானின் ஆயுதசேகரிப்புத்திட்டம் இத்தகைய நிதிநெருக்கடிகளுக்கு மத்தியிலேயே அமுல் படுத்தப்படவேண்டி உள்ளது.

இத்தப்பிராந்தியத்தில் இராணுவ மீள்கிளர்ச்சி எதுவும் ஏற்படுவதானால் அது சவூதி அரேபியாவிலிருந்தே ஏற்படும் என்று ஆய்வாளர் குறிப்பிடுகிறார். 1990ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாத குவைத் பிரச்சினைக்குப் பின்னர் றியாத் 3500 கோடி அமெரிக்க டொலர் பெறுமதியான மேற்கத்தைய ஆயுதங்களுக்கு கொள்வனவு கட்டளைகளை அனுப்பியது. அமெரிக்காவிடம் சமர்ப்பித்த ஆயுத கொள்வனவுக் கட்டளைகள் மாத்திரம் 2600 கோடி அமெரிக்க டொலர் பெறுமதி வாய்ந்தவையாகும்.

### இஸ்ரேலின் பலம்

மத்திய கிழக்கில் அணு ஆயுத அபிலாஷைகளைக் கொண்டுள்ள நாடு ஈரான் மாத்திரமல்ல. குடாநாட்டு யுத்தமும் அதன் பின்னர் தோன்றியுள்ள நிலைமையும் அணு ஆயுத துறையில் ஈராக்கின் ஆர்வத்தையும் அது எட்டிய சாதனையையும் எடுத்துக் காட்டுகின்றன.

இருந்தும் இஸ்ரேல் 1950களிலிருந்தே ஒரு பலம் பொருந்திய அணுசக்தி நாடாக விளங்கி வருகிறது. 1990இல் சவூதி அரேபிய மன்னர் பாஹ்த் இஸ்ரேலிய அணு ஆயுத பலம் 200 ஏவுகணைகளையும் 47 குண்டுகளையும் கொண்டிருந்தது என்று மதிப்பிட்டார்.

இஸ்ரேல் வருடம் தோறும் 40 கிலோ கிறாம் புளுடோனியத்தை உற்பத்தி செய்து வருகிறது என்று அந்த நாட்டு திமோனா ஆலையின் முன்னைநாள் தொழில்நுட்ப இயலாளர் ஒருவர் தெரிவித்திருக்கிறார். 1945ஆம் ஆண்டில் ஜப்பானிய நகரான நாகசாகியில் போடப்பட்ட குண்டினைப் போன்ற 10 அணுகுண்டுகளை தயாரிக்க இந்த புளுடோனியம் போதுமானது.

அமெரிக்காவின் முக்கிய நட்பு நாடுகளான ஜப்பான், ஜேர்மனி, பிரான்ஸ், இத்தாலி, பிரிட்டன் போன்றவற்றுக்கு இந்த விடயங்களில் அநேகமானவை தெரியும் என்றே நம்பப்படுகிறது. 1979ஆம் ஆண்டிலிருந்து ஈரானின் புரட்சிக் காலத்தில் ஜப்பானும் ஜேர்மனியும் ஈரானுடன் முன்னணி வர்த்தகத்தில் ஈடுபட்டு வந்தமை குறிப்பிடத்தக்கது.

தெஹ்ரானுடன் இலாப நோக்குடன் மேற்கொள்ளப்படும் இந்த வர்த்தகத்தை கைவிடுமாறு வாஷிங்டன் வற்புறுத்தி வருவது குறித்து இந்த நாடுகள் ஏற்கெனவே கவலை தெரிவித்து வந்தமை இங்கு குறிப்பிடத்தக்கது. இத்தகைய கோரிக்கையை ஏற்க இந்த நாடுகள் விரும்பவில்லை என்ற அறிகுறிகளே தென்படுகின்றன.

மீண்டும் அமெரிக்க நட்புறவு நாடுகள் வாஷிங்டனின் பாதுகாப்பு ஸ்தானத்திலிருந்து விடுபட்டு பிராந்திய பிரச்சினைகளுக்கு தாங்களே தீர்வு காண ஊக்குவிக்கப்பட வேண்டும் என்ற கிளின்டன் நிருவாக சிரேஷ்ட அதிகாரி ஒருவரின் புத்திமதியுடன் இந்நாடுகள் இலகுவில் தங்கள் நிலைகளை பலப்படுத்திக் கொள்ள முடியும்.

ஐ. பீ. எஸ்

## தோட்டப் பிள்ளைகளுக்காகவே சிறிபாத கல்லூரி அமைக்கப்பட்டது

### ஜெர்மன் தூதுவர் விளக்கம்

(கொழும்பு)

தோட்டப்பகுதி பிள்ளைக

வித்தியாலயத்தின் மூன்று மாடிக் கட்டட திறப்பு விழாவில்

அமைக்கப்பட்டது. அதன் இரண்டாவது கட்டமாகவே

மண்டல் பரிந்துரைப்படி

## வேலை வழங்காதுவிடில் டில்லி திரும்பேன் -வி. பி. சிங்

[சென்னை]

மண்டல் கமிஷன் பரிந்துரைகளின்படி முதலாவது நியமனம் செய்யப்படும் வரை தலைநகர் புதுடில்லிக்கு திரும்புவதில்லை என்ற பிரகடனத்

டல் கமிஷன் பரிந்துரைகளை அமுல்படுத்துவதில் காங்கிரஸ் கட்சி வேண்டுமென்றே தடங்கல்களை ஏற்படுத்துவதாகவும், அவர் குற்றம் சாட்டினார்.

ணம்போல் ஆரம்பத்தில் சிங்கங்கள் சீறி எழுந்தனதான். ஆனால், புலிகள் ஒழிக்கப்படவுமில்லை, ஒதுங்கிக் கொள்ளவுமில்லை. சிங்கங்கள் தான் புலிகளின் அதிரடிப் பாய்ச்சலுக்கு தாக்குப்பிடிக்க முடியாமல் தப்பி ஓடத்தொடங்கின.

இந்நிலையில். மீண்டும் சிங்கங்கள் களம் வர அஞ்சுகின்றன. சிந்திக்கத் தெரிந்த சிங்கங்கள் மோதலே வேண்டாம் என ஒதுங்கிக் கொள்ளத் தொடங்கி விட்டன. அதிர்ச்சி அடைந்த பேரினவாதமோ சலுகைகளைக் கொடுத்தும், ஆசைகளைக்காட்டியும் இராணுவத்திற்கு ஆள் திரட்டப் பார்க்கின்றது.

அரசாங்கத்தின் இன்றைய நிலையானது எவ்வாறேனும் இராணுவத்திற்கு ஆட்களைச் சேர்த்துக் கொண்டால் போதும் என்பதாகும். இவ்வாறு சேர்த்துக் கொள்ளப்படுபவர்களை வெடிப்பொருள்களையும், துப்பாக்கிகளையும் பயன்படுத்த பயிற்சி அளித்து விட்டு அவர்களைப் போர்முனைக்கு அனுப்புவதே அரசாங்கத்தின் முடிவாகும். அவ்வாறு இல்லாதுவிடின் இக்குறைந்த கல்வித் தரத்திலும், இராணுவ விதிமுறைகளைக் கைவிட்டு இராணுவத்தை விட்டு ஓடியவர்களையும், சமூக விரோத நடவடிக்கைகளில் ஈடுபட்டவர்களையும் இராணுவத்தில் இணைத்துக் கொள்ள அரசு முன் வந்திருக்காது.

ஐந்தாம் ஆண்டு கல்வித் தகைமை என்பது ஒரு கணிப்பில் எடுத்துக் கொள்ளக் கூடிய ஒரு தகைமை அல்ல. வசதிக்குறைவால் சிறு பகுதியினர் ஐந்தாம் வகுப்பிறகு மேல் கல்வி கற்க வசதி இழந்திருப்பினும், பொதுவாகவே ஐந்தாம் வகுப்பிற்கு மேல் கல்வியைத் தொடராதவர்கள் கல்வியில் ஆர்வமற்றவர்களாகவும், குழப்பக்காரர்களாகவும், பெற்றோரின் விருப்புக்களை மதியாதவர்களாகவே இருந்திருப்பர். அத்தோடு, அவர்கள் ஐந்தாம் வகுப்புவரைபெற்றகல்வி என்பதும் பூச்சியமாகவும் இருக்கும். மேலும், அவர்கள் சுமார் 10 வயதில் பாடசாலையைவிட்டு வெளியேறியவர்களாகவும இருப்பர். இவர்களைப் பின்னர் இராணுவத்தில் சேர்த்துக் கொள்ளும்வரை - சராசரி 20 வயதில் - புதிதாக எதையும் கற்காதது மட்டுமல்ல, பழையனவற்றையும் முற்றாக மறந்து போய், கையொப்பதிற்காக 'கைநாத்து' இடுபவாகளாகவே இருப்பார்கள்.

இதேவேளை, இராணுவத்தைவிட்டு ஓடியவர்கள் பற்றி வெளியாகிக் கொண்டிருக்கும் தகவல்களோ அதிர்ச்சி ஊட்டுபவையாக உள்ளன. கொலை, கொள்ளை, கற்பழிப்பு என கிரிமினல் குற்றங்களில் அவர்கள் தனியாகவும், கூட்டாகவும ஈடுபட்டு வருவதாக சிறிலங்காப் பொலிஸ் வட்டாரங்களே தெரிவிக்கின்றன. இது தொடர்பாக சிறிலங்காப் பொலிஸாரும் பலரைக் கைது செய்துள்ளனர். இன்னும் ஆயிரக்கணக்கானோர் தலைமறைவாக வாழ்வதோடு, இவ்வாறான கிரிமினல் நடவடிக்கையில் ஈடுபட்டும் வருகின்றனர்.

இந்நிலையில, அரசாங்கம இராணுவத்திற்குச் சேர்த்துக் கொள்ளவுள்ள கூட்டமானது ஒரு கிரிமினல்களின் கூட்டமாகவே இருக்கும் என்பதில் சந்தேகப்பட ஏதுமில்லை. இவர்கள் சிறிலங்கா அரசாங்கம் கூறுவதுபோல் ஒரு போதும் சட்டம் - ஒழுங்கைப் பாதுகாப்பவர்களாக இருக்க முடியாது. கொலைகாரர்களாகவும், கிடைத்ததைச் சுருட்டும் கொள்ளைக்காரர்களாகவுமே இருக்க முடியும். ஆகையினால், சிறிலங்காவின் இராணுவத்திற்கு ஆட்சேர்ப்பு என்பது கிரிமினல்களை கூட்டு சேர்ப்பதாகவே இருக்கும்.

---

மத்திய கிழக்கு சமாதான பேச்சுவார்த்தைகளுக்கு குந்தகம் விளைவிக்கும் ஹாமாஸ், ஹிஸ்புல்லா குழுக்களுக்கு ஈரான் ஆதரவு வழங்குகிறது என்ற உணர்விலேயே தற்போதைய அமெரிக்கக்கொள்கை தயாரிக்கப்பட்டுள்ளது.

லெபனானிலும் சூடானிலும் பயங்கரவாத பயிற்சி

...ஆதாரம் இல்லை

மேலும் சூடானில் பயங்கரவாத பயிற்சி முகாம்களை ஈரான்நடத்திவருகிறது என்று எகிப்து திருப்பித் திருப்பி குற்றம்சாட்டி வருகின்ற போதிலும் இதனை நிருபிக்க உறுதியான ஆதாரம் எதையும் இதுவரைமுன் வைக்கவில்லை.

இதற்கிடையில் லெபனானில் கடைசியாக இடம்பெற்ற

...யும் சொத்துக்களையும் பெருமளவில் இழந்த ஈரான் அதன் ஆயுதக் குதங்களை மீண்டும் கட்டியெழுப்ப வேண்டும் என்பது இயல்பானதே.

வாஷிங்டன் கூறுவதுபோல் இது ஒரு ஈரானின் இராணுவ எழுச்சி என்று வர்ணிப்பது மிகையானது என்று லண்டனில் ஆய்வாளர் ஒருவர் கருத்து வெளியிட்டுள்ளார்.

இருந்தும் இஸ்ரேல் 1950 களிலிருந்தே ஒரு பலம் பொருந்திய அணுசக்தி நாடாக விளங்கி வருகிறது. 1990இல் சவூதி அரேபிய மன்னர் பாஹ்த் இஸ்ரேலிய அணு ஆயுத பலம் 200 ஏவுகணைகளையும் 47 குண்டுகளையும் கொண்டிருந்தது என்று மதிப்பிட்டார்.

இஸ்ரேல் வருடம் தோறும் 40 கிலோ கிறாம் புளுடோனி

...னைகளுக்கு தாங்களே தீர்வு காண ஊக்குவிக்கப்பட வேண்டும் என்ற கிளிண்டன் நிருவாக சிரேஷ்ட அதிகாரி ஒருவரின் புத்திமதியுடன் இந்நாடுகள் இலகுவில் தங்கள் நிலைகளை பலப்படுத்திக் கொள்ள முடியும்.

ஐ. பீ. எஸ்

---

# தோட்டப் பிள்ளைகளுக்காகவே சிறிபாத கல்லூரி அமைக்கப்பட்டது

## ஜெர்மன் தூதுவர் விளக்கம்

(கொழும்பு)

தோட்டப்பகுதி பிள்ளைகளுக்கு நல்ல கல்வி கிடைக்கவும், அதற்கான வசதிகளை ஏற்படுத்தவுமே சிறிபாத கல்வியியல் கல்லூரி அமைக்கப்பட்டது என்று இலங்கைக்கான ஜெர்மன் தூதுவர் கிளாஸ் பிராங்க் தெரிவித்தார்.

கொட்டகலை தமிழ் மகா வித்தியாலயத்தின் மூன்று மாடிக் கட்டட திறப்பு விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரை நிகழ்த்திய அவர் மேலும் கூறுகையில்; இலங்கை அரசுக்கும், ஜேர்மன் குடியரசுக்கும் இடையே கையெழுத்தாகிய உடன்படிக்கை ஒன்றின் அடிப்படையிலேயே சிறிபாத கல்வியியல் கல்லூரி அமைக்கப்பட்டது. அதன் இரண்டாவது கட்டமாகவே இந்த மூன்றுமாடிக் கட்டடம் அமைக்கப்பட்டது. இந்த திட்டத்திற்காக ஜெர்மன் அரசு இருபது மில்லியன் ரூபா வரையில் செலவிட்டுள்ளது. மலையகத்தை பொறுத்தவரையில் கல்வி நிலையில் அபிவிருத்தி ஏற்படாமையினால் அம் மக்கள் பெரிதும் மனவிரக்தி கொண்டிருக்கின்றனர் எனவும் தெரிவித்தார்.

# இலங்கை பிரஜாவுரிமை இப்போது மலிவுப் பண்டம்

## -லக்ஷ்மன் ஜெயக்கொடி கண்டனம்

இலங்கை பிரஜாவுரிமை என்பது இப்போது மலிவான பொருளாகிவிட்டது என்று சுதந்திரக்கட்சிப் பாராளுமன்ற உறுப்பினர் லக்ஷ்மன் ஜெயக்கொடி தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் அண்மையில் இலங்கையில் ஓர் இலட்சத்து ஐம்பதாயிரம டாலர் முதலீடு செய்யும் ஒருவருக்கும் இலங்கை பிரஜாவுரிமை வழங்க ஏற்பாடு செய்யும் சட்ட மூலம் விவாதத்திற்கு எடுக்கப்பட்டபோது அதில் கலந்து கொண்டு உரை நிகழ்த்திய ஜெயக்கொடி மேலும் கூறுகையில்,

இந்த ஏற்பாட்டின் மூலமாக மோசடிக்காரர்களும், போதைப் பொருள் கடத்தல் காரர்களும், தரகர்களும்தான் பயனடையப் போகின்றனர் என்று தெரிவித்தார்.

அத்துடன் பிரஜாவுரிமை விவகாரத்தில் மற்ற நாடுகள் மிகவும் எச்சரிக்கையுடன் செயற்படும் போது ஐ. தே. க. அரசு மாத்திரம் அதனை மலிவுப் பொருளாக்குகிறது. இந்த ஏற்பாட்டின் மூலம் எமது நாட்டுக்கு பணம் வரப்போவதில்லை. வெளிநாட்டுத் தரகர்கள் இங்கு வந்து பங்குச் சந்தை போன்றவற்றில் புகுந்த பணம் ஈட்டப் போகிறார்கள். இவர்கள் ஐ தே. க. விற்கு பணம் தரபபோகிறார்கள் ஜோசிம் போன்ற கசினோ சூதாட்டக்காரர்கள் ஒரு லட்சத்து ஐம்பதாயிரம் டாலர்களுடன் வந்து பிரஜைகளாகிவிடப் போகிறார்கள். ஒரு பஜிரோவின் விலைக்கு இலங்கை பிரஜாவுரிமை விற்கப்படப்போகிறது என்றும் தெரிவித்தார்.

# ஐ.ஐ.தே.மு. ஆதரவை பெற சந்திரிகா முயலவேண்டும்

## --காமினி திசாநாயக்கா

(கொழும்பு)

மேல் மாகாண சபையில் அதிகார பலத்தைப் பேணுவது அவசியம் என்று முதல்வர் திருமதி சந்திரிகா உணர்ந்தால் ஐ ஐ தே மு வின் ஆதரவைப்பெறுவதுஎவ்வாறுஎன்பதையும்அவர்தெரிந்துகொள்ள வேண்டும் என்று ஐ ஐ.தே மு தலைவரும், முன்னாள் அமைச்சருமான காமினி திசாநாய[க்]கா தெரிவித்தார்.

கொழும்பில் சிங்களத்தின[...]சரி ஒன்றுக்கு பேட்டி அளித்த அவர் மேலும் கூறுகையில் ஐ.தே.கட்சியுடன் தனது கட்சி இணைந்து கொண்டாலும்கூட பே[ச்சு] மாகாணத்தில் தலைமை[யிலும்] எண்ணம் எதுவும் த[மக்கு] கிடையாது எனவும், [த]மது எண்ணம் பற்றி ஜனாதி[ப]தி டி. பி விஜேதுங்கவுடன் [பே]சி இணக்கம் கண்டிருப்ப[த]ாகவும் தெரிவித்தார்.

---

நீரின்றி

### கால்நடைகள் தவிப்பு

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் கடும்வெப்பம் காரணமாக கால்நடைகள் குடிக்கத் தண்ணீர் இன்றி அலைந்து திரிகின்றன,

குளங்கள் பெரும்பாலான வற்றில் தண்ணீர் இல்லாது இருக்கிறது .பெரும் பாலான கால்நடைகள் தண்ணீர் தாகத்தால் தண்ணீரைத்தேடி அலைவதைக் காணக்கூடியதாக உள்ளது (24)

### பாவனையாளருக்கு அறிவுறுத்தல்

மென்பானம், பழரசம் தயாரிப்பின்போது கடைப்பிடிக்க வேண்டிய நடைமுறைகள் அண்மையில் தொழில்துறை மேம்பாட்டு நிறுவனத்தால் வெளியிடப்பட்டிருந்தது ஆனால் சில உற்பத்தியாளர்கள் இந்த நடைமுறைகளை முழுமையாக கைக்கொள்ளாமவிருப்பதை அவதானிக்கக் கூடியதாக இருப்பதாக தொழில்துறை மேம்பாட்டு நிறுவனம் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பொன்று தெரிவிக்கிறது.

திகதிகள் தெளிவாகக் குறிப்பிடப்படாதிருக்கும் மென்பானம், பழரசம் போன்றவை மக்களுக்கு தீங்கினை விளைவிக்கக் கூடியதாக இருக்கலாம் என்பதால் இவற்றினை பாவிப்பது தொடர்பான விடயத்தில் மக்கள் விழிப்புடன் இருக்குமாறும் இச் செய்திக் குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

---

மண்டல் பரிந்துரைப்படி

# வேலை வழங்காதுவிடில் டில்லி திரும்பேன் -வி. பி. சிங்

[சென்னை]

மண்டல் கமிஷன் பரிந்துரைகளின்படி முதலாவது நியமனம் செய்யப்படும் வரை தலைநகர் புதுடில்லிக்கு திரும்புவதில்லை என்ற பிரகடனத்துடன் ஜனதா தள் தலைவரும், முன்னாள் பிரதமருமான வி. பி. சிங் தலைநகரிலிருந்து நேற்று முன்தினம் வெளியேறினார்.

பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கு அரசாங்க வேலைகளில் இடம் ஒதுக்குவது மண்டல் கமிஷன் பரிந்துரைகளை அமுல்படுத்துவதில் காங்கிரஸ் கட்சி வேண்டுமென்றே தடங்கல்களை ஏற்படுத்துவதாகவும், அவர் குற்றம் சாட்டினார்.

மண்டல் கமிஷனின் பரிந்துரைகளின் அடிப்படையில் முதலாவது இளைஞர் நியமனம் பெறும் நாளே தமது வாழ்வின் பெருமைக்குரிய நாளாக இருக்கும் எனவும் அவர் தெளிவுபடுத்தினார்.

# தமிழக ஆட்சியை கவிழ்க்க காங்கிரஸ் கட்சி முயல்கிறது

## -பாரதீய ஜனதா குற்றச்சாட்டு

(சென்னை)

தமிழகத்தில் ஆட்சியை சீர்குலைக்க காங்கிரஸ் கட்சி தலைமையிலான மத்திய அரசு முயன்று வருகிறது என்று பாரதீய ஜனதாக்கட்சி குற்றம் சாட்டியுள்ளது.

நேற்று முன்தினம் கோயம்புத்தூரில் நிறைவெய்திய அக்கட்சியின் தமிழ்நாடு மாநில மாநாட்டில் நிறைவேற்றப்பட்ட தீர்மானம் ஒன்றில் மக்களால் தெரிவு செய்யப்பட்ட மாநில அரசு கவிழ்க்கப்படுமேயானால் அதன் விளைவுகள் கடுமையானதாக இருக்கும் என்றும் எச்சரிக்கப்பட்டுள்ளது.

மற்றுமொரு தீர்மானத்தில் அரசியலிலிருந்து மதத்தைப் பிரிப்பது என்ற போர்வையில் கொண்டுவரப்பட்டுள்ள சட்ட மூலத்தின் மூலம் பாரதீய ஜனதாக்கட்சி தேர்தலில் போட்டியிடுவதை தடுக்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டிருப்பதாகவும் குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

# மதஊர்வலங்களை தடுப்பது அடிப்படை உரிமைமீறலாகும்

## - பாரதீய ஜனதா

[சென்னை]

மதச்சார்பின்மை என்பதன் பேரால் மத ஊர்வலங்களைத் தடை செய்வது பொருத்தமற்றதாகும் என்று பாரதீய ஜனதாக் கட்சியின் பொதுச் செயலாளர் வெங்கையா நாயுடு கூறியுள்ளார்.

கோயம்புத்தூரில் நேற்று முன்தினம் செய்தியாளர்கள் மத்தியில் பேசிய அவர் மேலும் கூறுகையில் மத சம்பந்தமான ஊர்வலங்களை நடத்துவதும் அவற்றில் கலந்து கொள்வதும் மக்களின் அடிப்படை உரிமைகள் ஆகும். எனவே அத்தகைய ஊர்வலங்களை தடை செய்வது பொருத்தமற்றதாகும் என்றும் தெரிவித்தார்.

முகமது நபிகள் பிறந்த தினம், விநாயக சதுர்த்தி போன்ற தினங்களை முன்னிட்டு பொது வழிபாடு அல்லது ஊர்வலங்கள் நடத்த வேண்டாம் என்று முதல்வர் ஜெயலலிதா கோரிக்கை விடுத்திருப்பதையும் தாம் ஏற்றுக் கொள்ளவில்லை எனவும் அவர் தெரிவித்தார்.

அத்துடன், மாநிலத்தில் சட்டம் ஒழுங்கு நிலைமை குறித்து தமிழக அரசுக்கு கவலையேதும் இருக்குமாயின் மத ஊர்வலங்களை கட்டுப்படுத்தி முறைப்படுத்தலாமெனவும் குறிப்பிட்டார்.

ஈழநாதம்

## வன்னி மாவட்டத்தில் நடந்த ஏழு நாள் விளையாட்டு விழா

வன்னி மாவட்டத்தில் ஐக்கிய விளையாட்டுச் சபையினால் நடாத்தப்பட்ட ஏழு நாள் விளையாட்டுப் போட்டிகள் நேற்றுமுன்தினம் நிறைவு பெற்றன. இவ் விளையாட்டு விழாவில் பெருமளவு விளையாட்டு வீரர்களும் வீராங்கனைகளும் கலந்து கொண்டனர்.

இறுதி நாள் விளையாட்டு விழாவின்போது 9 வீரர்களைக் கொண்ட உதைபந்தாட்டத்தில் கிளிநொச்சி மேற்கு வட்ட அணியும் தமிழீழ விடுதலைப் புலிகள் "ஆ" அணியும் பங்குபற்றின. முல்லையணிக்கும் நெய்தலணிக்கும் இடையில் இடம்பெற்ற போட்டியில் முல்லையணி வெற்றிபெற்றது. இந் நிகழ்வில் வேறும் பல போட்டிகளும் இடம்பெற்றன.

இறுதியில் தமிழீழ தேசியக் கொடியை வன்னி மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் திரு. மனோ அவர்களும், ஐக்கிய விளையாட்டு சபை கொடியை வி. பொன் விநாயகமூர்த்தி அவர்களும் மற்றும் கழகக் கொடிகளை கழகத் தலைவர்களும் இறக்கி வைத்தனர்.

இவ் விளையாட்டு விழாவிலும் பரிசளிப்பு விழாவிலும் பெருமளவு மக்கள் கலந்து கொண்டனர்.

## பதவி ஏற்பு

புதிதாக இரண்டு அமைச்சர்கள், கருத்திட்ட அமைச்சர்கள் நேற்று பதவி ஏற்றனர். போல் பெரேரா காணி அமைச்சராகவும், ஜோன் அமரதுங்கா உள்விவகார மாகாணசபைகள் அமைச்சராகவும், பெரேரா குருனே விஞ்ஞான தொழில்நுட்ப கருத்திட்ட அமைச்சராகவும், தர்மதேவ ஜயசிங்க உள்நாட்டு அலுவல்கள் மாகாண சபை இராஜாங்க அமைச்சராகவும் பதவி ஏற்றனர்.

## பரீட்சை விடைத்தாள்கள் குமணவில் செல்லும்

இன்றுடன் முடிவடைகின்ற க. பொ. த உயர்தரப் பரீட்சையின் இரண்டாம் தொகுதி விடைத்தாள்கள் 26 ஆம் திகதி வியாழக்கிழமை குமண கப்பல் மூலம் பரீட்சைத்திணைக்களத்திற்கு எடுத்துச் செல்ல நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக யாழ் கல்வித்திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்தன.

இவ் விடைத்தாள்களை யாழ். பிரதேசக் கல்விப்பணிப்பாளர் இரா. சுந்தரலிங்கம் தம்முடன் திருக்கோணமலை வரை கப்பலில் எடுத்துச் சென்று அங்கிருந்து வாகனம் மூலம் பரீட்சைத்திணைக்களத்திற்கு எடுத்துச் செல்வார்.

இக்கப்பல் நாளை மறுதினம் பருத்தித்துறையில் இருந்து திருக்கோணமலை புறப்படவுள்ளது.

இதற்கிடையில் நாளை மறுதினம் இங்கு நடைபெற இருக்கும் ஆங்கில தேசிய சான்றிதழ்ப் பரீட்சை (என். சி. ஈ.) க்கான வினாத்தாள்கள் விமான மூலம் பலாலிக்கு எடுத்து வரப்பட்டுள்ளன. இவ் வினாத்தாள்கள் இன்று 'வாதுவ' கப்பல் மூலம் பருத்தித்துறைக்குஎடுத்துவரப்படும்

## அரச அதிபர் வருகையில் தாமதம்

[யாழ்ப்பாணம்]

யாழ். அரச அதிபர் கா. மாணிக்கவாசகர் நேற்று பருத்தித்துறையை வந்தடைந்த "வாதுவ" கப்பலில் புறப்பட்டுவர இருந்தார். இவரின் பயணம் இறுதி நேரத்தில் தடைப்பட்டுள்ளதாக தெரியவருகின்றது.

இவர் எதிர்வரும் 26ஆம் திகதி திருக்கோணமலை சென்று திரும்பும் 'குமண' கப்பலில் திருக்கோணமலையில் இருந்து புறப்பட்டு இங்குவந்து சேருவார் என தெரியவருகின்றது. [பா]

## 'நரோமா'வின் சேவை பற்றி முரணான தகவல்கள்

கடந்த 17ஆம் திகதி 'நரோமா' கப்பலில் பயணம் செய்வதற்குப் பதிவு செய்த பிரயாணிகள் பருத்தித்துறை துறைமுகத்திற்கு இன்று பிற்பகல் 1.00 மணிக்குச் செல்லும்படியும், கூட்டுப்படைத் தலைமை அனுமதி கிடைத்தால் மட்டும் இவர்களின் பயணம் உறுதி செய்யப்படும் எனவும் யாழ். மேலதிக அரசாங்க அதிபர் திருமதி ப. திலகநாயகம் அறியத்தருகிறார்.

இதேவேளை 'நரோமா' கப்பல் இன்று பருத்தித்துறை துறைமுகத்துக்கு வருவதற்கான சாத்தியம் குறைவாகவே உள்ளது எனவும் இம்மாத இறுதியிலேயே 'நரோமா' பருத்தித்துறை வரும் சாத்தியம் உள்ளதெனவும் சர்வதேச செஞ்சிலுவைச் சங்க வட்டாரங்களில் இருந்து தெரியவருகிறது. (பா)

## பொதுசன மாதாந்த உதவிப்பண கொடுப்பனவு

பொதுசன மாதாந்த உதவிப் பணம் 1993 மாசி மாதம் தொடக்கம் ஆவணி மாதம் வரைக்கான ஏழு மாத கொடுப்பனவுகள் ஒரே தடவையாக புங்குடுதீவு, வேலணை, தபாலகங்கள் ஊடாக செய்யப்படுகின்றன. இத் தபாலகங்கள் யாழ். மத்திய தபாலகத்தில் தற்காலிகமாக இயங்குகின்றன.

தெற்பெலி அகதிமுகாமில் வசிக்கும் மக்களுள் இக்கொடுப்பனவை பெறுபவர்களுக்கு ஏழு மாத கொடுப்பனவும் விடத்தல்பளை உபதபாலக மூடாக வழங்கப்படுகின்றன. சம்பந்தப்பட்டவர்கள் இக் கொடுப்பனவை பெற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றார்கள்.

### இராணுவத்திற்கு

னால் இராணுவபலம் 80,000 ஆக இருந்து வருகிறது. இது பல படையினர் இராணுவத்தை விட்டு ஓடுதல், பலியாதல், காயமடைதல், காணாமற்போதல் போன்ற காரணங்களால் மேலும்குறைந்துள்ளது

இப்போது இராணுவ ஆட்சேர்ப்பிற்கு அரசு நிதி வழங்கியும்கூட புலிகளுடன் போரிட ஆயுதம் தாங்க முன்வரும் இளைஞர்களை கண்டுபிடிப்பது இராணுவத்திற்கு பிரச்சினையாக உள்ளது. இராணுவத்தில் சேர நேற்று வந்தவர்கள் எண்ணிக்கை 1987, 1988 இல்கூடபடையில் சேர வரிசையில்நின்ற சிங்கள இளைஞர்களுடன் ஒப்பிடுகையில் நேரெதிராக உள்ளது.

தென்னிலங்கையின் பல பகுதியிலும் அமைக்கப்பட்டுள்ள 21 ஆட்சேர்ப்பு நிலையங்களில் ஆயுதம் தாங்கக்கூடிய ஆயிரம் பேரையாவது இராணுவம் சேர்த்துக்கொள்ள முடியுமா என அரசியல் பார்வையாளர்கள் ஐயப்படுகின்றனர்.

## யாழ். போதனா வைத்தியசாலைக்கு வந்த பிரிட்டிஷ் மருத்துவ உபகரணங்களை சிங்களப்பகுதிகளுக்கு அனுப்பசூழ்ச்சி

(வடமராட்சி)

யாழ். போதனா வைத்தியசாலைக்கு பிரிட்டிஷ் அரசாங்கம் அன்பளிப்புச் செய்த மருத்துவ உபகரணங்களை கிழக்கில் சிங்கள மக்கள் அதிகமாகவுள்ள வைத்தியசாலைக்கு அனுப்புவதற்கு சிறிலங்கா அரசாங்கம் சூழ்ச்சிகளைச் செய்துவருகிறது.

இவ் உபகரணங்களை கிழக்கில் உள்ள வைத்தியசாலைக்கு அனுப்ப பிரிட்டனிலிருந்து வந்த ஏஜெண்ட்டுக்கு விளக்கமளிக்கப்பட்டதாகத் தெரியவருகிறது.

கிழக்கிலும் தமிழர்கள் இருக்கிறார்கள் அவர்களுக்குத்தான் இது முக்கியமாகப் பயன்படவேண்டும்என்ற போர்வையில் இப் பொருள்களை அம்பாறை, கந்தளாய் பகுதி வைத்தியசாலைகளுக்கு அனுப்பஅரசு விரும்புகிறது.

50 இலட்சத்துக்கு மேற்பட்ட பெறுமதி கொண்ட இப் பொருள்களையாழ். வைத்தியசாலைக்கு எடுத்துவர வேண்டுமென்பதில் இங்கிருந்து சென்ற வைத்திய அதிகாரிகள் குழு விடாப்பிடியாக இருப்பதாகத் தெரியவருகிறது. இக்குழு தொடர்ந்து இவ் விடயம் சம்பந்தமாக சம்பந்தப்பட்ட அதிகாரிகளோடு பேச்சுவார்த்தைசெய்துவருகின்றது. (யோ)

## பிரிட்டிஷ் வைத்தியர் நேற்று யாழ். விஜயம்

(வடமராட்சி)

யாழ் போதனா வைத்தியசாலையை பார்வையிடுவதற்காக பிரிட்டனைச் சேர்ந்த வைத்திய கலாநிதி ஒருவர் நேற்று 'வாதுவ' கப்பல் மூலம் யாழ்ப்பாணம் வந்து சேர்ந்தார்.

வைத்திய கலாநிதி டாக்டர் ஜில்லியன் என்பவரே நேற்று வந்தவராவர். இவர் மூன்று தினங்கள் இங்கு தங்கியிருந்து போதனா வைத்திய சாலையைப் பார்வையிடுவதோடு அங்கு நிலவும் குறைபாடுகளையும் கேட்டறிவார். (யோ)

## ஜெனரேற்றர் உதிரிப்பாகம் கொழும்பில் பெறலாம்

(யாழ்ப்பாணம்)

யாழ். போதனா வைத்தியசாலையில் தற்சமயம் பழுதுபார்க்கப்படவுள்ள 85 கிலோவாற் மின் பிறப்பாக்கிக்கான உதிரிப்பாகங்கள் தற்சமயம் கொழும்பில் பெற்றுக்கொள்ளக் கூடியதாக உள்ளது என சர்வதேச செஞ்சிலுவைச் சங்க வட்டாரங்கள் தெரிவித்தன.

யாழ் போதனா வைத்தியசாலையினால் இவ் உதிரிப்பாகங்களைக்கொள்வனவு செய்வதற்கு தேவையான பணம் செலுத்தப்படாமையை அடுத்தே இந் நடவடிக்கை காலதாமதமாகின்றது என அவ்வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன. [பா]

வவுனியா நகர்ப்பகுதியில்

## அனுமதிப்பத்திரம் இன்றி தங்கியிருந்தவர் கைது

வவுனியா நகரில் சிறிலங்கா பொலிசாரின் அனுமதிப் பத்திரம் இன்றி தங்கியிருந்த கிளிநொச்சி வாசி ஒருவர் கைது செய்யப்பட்டு ஒரு மாதத்திற்குப் பின்னர் விடுவிக்கப் பட்டுள்ளார்.

கடந்த மாதம் 29ஆம் திகதி இவர் வவுனியாவில் அனுமதிப் பத்திரமின்றி காணப்பட்டதாக சிறிலங்கா பொலிசாரால் கைது செய்யப்பட்டு பின்னர் வவுனியா ஜோசப் முகாமில் தடுத்துவைக்கப்பட்டிருந்தார். கிளிநொச்சியைச் சேர்ந்த கிருஷ்ணன் கந்தசாமி (வயது 28) என்ற இவர் கடந்த சனியன்று விடுவிக்கப் பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

## கப்டன் பிரவின்ராஜ் எழுச்சிக் குடியிருப்பு

[மன்னார்]

கடந்த பெப்ரவரி 20ஆம் திகதியன்று கட்டைக்காட்டுப் பகுதியில் அமைந்திருந்த இராணுவக் காவலரண்கள் தகர்ப்

ஆகியோர் எழுச்சிக் குடியிருப்பைத் திறந்து வைத்தனர். இரவு 7.00 மணியளவில் வீரவணக்கக் கூட்டம் இடம்பெற்றது. இந் நிகழ்வில் ஈகைச்


சென். ஜோண் அம்புலன்ஸ் படை
யாழ்-நல்லூர் பிரதேசம்

முக்கிய அறிவித்தல்

எமது பிரதேச ஆணையாளர் திரு. செல்வரஞ்சன் அவர்களின் தந்தையார் திரு. செல்வநாயகம் அவர்கள் காலமாகிவிட்டார். இப்பிரதேசத்தைச் சேர்ந்த அனைத்துப் படைப்பிரிவுகளும் பூரண சீருடையுடன் ஸ்ரேசன் வீதி, கொக்குவிலிலுள்ள அன்னாரது இல்லத்திற்கு இன்று (24-8-93) நண்பகல் 12-00 மணிக்கு சமுகமளிக்கவும்.

செல்வன் எறிக் எஸ். யேசுதாஸ்
(பிரதேச நிறைவேற்று உத்தியோகத்தர்)
(சி/7252) சென். ஜோன் அம்புலன்ஸ் படை

சுன்னாகம் பல நோ. கூ. சங்கம் (வ-து) சுன்னாகம்

'அறிவித்தல்'

பயிலுநர் இலிகிதர் பதவி

மேற்படி பதவிக்கு யாழ். மாவட்டத்தில் வசிக்கும் தகுதி வாய்ந்த விண்ணப்பதாரிகளிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1) தகைமை:-
க. பொ. த. (சாதாரண) தரத்தில் இரண்டு அமர்வுகளுக்கு மேற்படாமல் எண்கணிதம்/வர்த்தக எண் கணிதம், தூயகணிதம், தமிழ்மொழி என்பவற்றினை உள்ளடக்கியதாக 06 பாடங்களிலான சித்தியும், கூட்டுறவுப் பணியாளர்சாதாரணதரப் பத்திரமும்.

2) விசேட தகைமை:-

COMPUTER கல்வி
Diploma in Computer Programming
BASIC Language
4 MONTHS
COMMENCEMENT:
Weekday Course: 27. 08. 1993 8. 30 மணி
Weekend Course: 28 08. 1993 10. 30 மணி

உளச்சார்பறி சோதனை - 25. 08. 1993
4. 00 மணி
மாணவர்கள் விரும்பினால் இப் போட்டியில் கலந்து கொள்ளலாம். ஆகக்கூடிய புள்ளிகள்

(பிரதேச நிறைவேற்று உத்தியோகத்தர்)
செஞ். ஜோன் அம்புலன்ஸ் படை

(சி/7252)



சுன்னாகம் பல நோ. கூ. சங்கம் (வ-து) சுன்னாகம்

## 'அறிவித்தல்'

### பயிலுநர் இலிகிதர் பதவி

மேற்படி பதவிக்கு யாழ். மாவட்டத்தில் வசிக்கும் தகுதி வாய்ந்த விண்ணப்பதாரிகளிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1) தகைமை:-
க. பொ. த. (சாதாரண) தரத்தில் இரண்டு அமர்வுகளுக்கு மேற்படாமல் எண்கணிதம்/வர்த்தக எண்கணிதம், தூயகணிதம், தமிழ்மொழி என்பவற்றினை உள்ளடக்கியதாக 06 பாடங்களிலான சித்தியும், கூட்டுறவுப் பணியாளர்சாதாரணதரப் பத்திரமும்.

2) விசேட தகைமை:-
கூட்டுறவுப் பணியாளர் (உயர்தரம்) பத்திரம்.

3) வயது:-
விண்ணப்ப முடிவு திகதியன்று 20 வயதுக்கு குறையாமலும், 40 வயதுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

4) விண்ணப்ப முடிவு திகதி: 06.09.1993

விண்ணப்பப் படிவங்களையும், ஏனைய விபரங்களையும் ரூ. 10/- செலுத்தி வேலை நாட்களில் தலைமைக் காரியாலயத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

சுன்னாகம் பல நோ. கூ. சங்கம், பொதுமுகாமையாளர்
சுன்னாகம். (சி/7249)


'வாதுவ' கப்பல் மூலம் பருத்தித்துறைக்குஎடுத்துவரப்படும் ... பனவை பெறுபவர்களுக்கு ஏழு மாத கொடுப்பனவும்


## COMPUTER கல்வி

Diploma in Computer Programming
BASIC Language
4 MONTHS

COMMENCEMENT:
Weekday Course: 27. 08. 1993 8. 30 மணி
Weekend Course: 28 08. 1993 10. 30 மணி

உளச்சார்பறி சோதனை - 25. 08. 1993
4. 00 மணி

மாணவர்கள் விரும்பினால் இப் போட்டியில் கலந்து கொள்ளலாம். ஆகக்கூடிய புள்ளிகள் எடுக்கும் பரீட்சார்த்திக்கு Scholorship வழங்கப்படும்.

Lectures by: S. P. SIVAPATHASUNDARAM
M. I. D. P. M. (Lond)
Fees: மாதம் ரூ. 400/- மட்டுமே

மேலும் விவரங்களுக்கு:
SCHOOL OF BUSINESS ADMINISTRATION
(Pioneers in Computer Education)
16, 3rd Cross Street, Jaffna.
(சி-7248)


மற்போதல் போன்ற காரணங்களால் மேலும்குறைந்துள்ளது.

இப்போது இராணுவ ஆட்சேர்ப்பிற்கு அரசு நிதி வழங்கியும்கூட புலிகளுடன் போரிட ஆயுதம் தாங்க முன்வரும் இளைஞர்களை கண்டுபிடிப்பது இராணுவத்திற்கு பிரச்சினையாக உள்ளது. இராணுவத்தில் சேர நேற்று வந்தவர்கள் எண்ணிக்கை 1987, 1988 இல்கூடபடையில் சேர வரிசையில்நின்ற சிங்களஇளைஞர்களுடன் ஒப்பிடுகையில் நேரெதிராக உள்ளது.

தென்னிலங்கையின் பல பகுதியிலும் அமைக்கப்பட்டுள்ள 21 ஆட்சேர்ப்பு நிலையங்களில் ஆயுதம் தாங்கக்கூடிய ஆயிரம் பேரையாவது இராணுவம் சேர்த்துக்கொள்ள முடியுமா என அரசியல் பார்வையாளர்கள் ஐயப்படுகின்றனர்.

இராணுவத்தில் ஊதியம் மற்றும் பல வசதிகள் இருந்தும் சிங்கள இளைஞர்களை இராணுவம் கவர முடியவில்லை. மோதலில் ஏற்படும் மரணம், வடக்கு கிழக்கு பகுதிகளில் இராணுவ முகாம்களும் படைப்பிரிவுகளும் புலிகளால் முற்றாக அழிக்கப்படல் போன்ற அன்றாடச் செய்திகள் போரிடுவதற்கான இலட்சியம் இல்லாமை காரணமாக இராணுவத்தில் உள்ள ஆதாயங்கள் பெரிதாக சிங்கள இளைஞர்களுக்குத் தோன்றவில்லை. வடக்கு இராணுவ முகாமில் அனுபவிக்க வேண்டிய கஷ்டங்கள் சிங்கள இளைஞர்கள் இராணுவத்தில் சேர்வதை ஊக்குவிக்கவில்லை.

வடபகுதி முகாம் படையினர் பல மாதங்கள் லீவு இன்றி இருப்பது, கடுமையான காடுகளினால் ஏற்படும் கஷ்டம், போர்முனையில், முகாமில் பொழுது போக்கு, கேளிக்கைகள் இல்லாமை, போரில் பலியாதல், புலிகளின் கண்ணியில் அங்கவீனமாதல் போன்றவை சிங்கள இளைஞர்கள் படையில்சேர ஊக்கமோ, உற்சாகமோ அளிக்கவில்லை என்பதே உண்மை என லூசியன் ராஜகருண நாயக்கா தெரிவித்தார்.

## அனுமதிப்பத்திரம் இன்றி தங்கியிருந்தவர் கைது

வவுனியா நகரில் சிறிலங்கா பொலிசாரின் அனுமதிப் பத்திரம் இன்றி தங்கியிருந்த கிளிநொச்சி வாசி ஒருவர் கைது செய்யப்பட்டு ஒரு மாதத்திற்குப் பின்னர் விடுவிக்கப் பட்டுள்ளார்.

கடந்த மாதம் 29ஆம் திகதி இவர் வவுனியாவில்அனுமதிப் பத்திரமின்றி காணப்பட்டதாக சிறிலங்கா பொலிசாரால் கைது செய்யப்பட்டு பின்னர் வவுனியா ஜோசப் முகாமில் தடுத்துவைக்கப்பட்டிருந்தார். கிளிநொச்சியைச் சேர்ந்த கிருஷ்ணன் கந்தசாமி (வயது 28) என்ற இவர் கடந்த சனியன்று விடுவிக்கப் பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

## கப்டன் பிரவின்ராஜ் எழுச்சிக் குடியிருப்பு

[மன்னார்]

கடந்த பெப்ரவரி 20ஆம் திகதியன்று கட்டைக்காட்டுப் பகுதியில் அமைந்திருந்த இராணுவக் காவலரண்கள் தகர்ப்பின் போது வீரச்சாவடைந்த மேஜர் ஆதிசுதன் உட்பட வீரச்சாவு அடைந்த 11 மாவீரர்களை நினைவு கூரும் நிகழ்வு நேற்று முன்தினம் பூமலர்ந்தான் பகுதியில் இடம்பெற்றது.

கப்டன் பிரவின்ராஜ் ஞாபகார்த்தமாக எழுச்சிக் குடியிருப்பு ஒன்று மன்னாரில்திறந்து வைக்கப்பட்டது. இந்நிகழ்வில் தமிழீழத் தேசியக் கொடியை மாவட்ட பிரதி அரசியல் துறைப் பொறுப்பாளர் திரு. நந்தகுமார் ஏற்றிவைத்தார். மாவட்டத்தளபதி திரு கதிர், மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் திரு. கணேஸ் ஆகியோர் எழுச்சிக் குடியிருப்பைத் திறந்து வைத்தனர். இரவு 7.00 மணியளவில் வீரவணக்கக் கூட்டம் இடம்பெற்றது. இந்நிகழ்வில் ஈகைச் சுடரை மாவீரன்செங்கோலின் தந்தைஏற்றிவைத்தார். அரச நிர்வாக பிரதிநிதிகள், மாவட்ட மாணவரமைப்பு பொறுப்பாளர் திரு. ரவிராஜ் ஆகியோர் உரைநிகழ்த்தினர்.

மாவட்ட அரசியல் துறை பொறுப்பாளர் திரு. கணேஸ் அவர்கள் தனது உரையின் போது "இன்றையபோராட்ட காலத்தில் அகதி முகாமில் முடங்கிக் கிடக்காமல் எமது பொருளாதாரத்தைக் கட்டி யெழுப்ப வேண்டும்" என்றார்.

## 8980 மெற்றிக்

விதப் பொருள்கள், இலங்கை வங்கி, மக்கள் வங்கிக்கு காகிதாதிகள், தனியாருக்கு சவர்க்காரங்கள், விதைநெல், மரக்கறி விதைகளும் வந்தன.

யாழ். திட்டப்பணிப்பாளர் திரு. செ. பத்மநாதன் கப்பலுக்கு சென்று திரும்பியதையடுத்து பொருள்கள் இறக்கப் பட்டன. அதே சமயம் 'குமண' கப்பலில் இருந்தும் பொருள்கள் இறக்கப்பட்டு வருகின்றன. (யோ)

## உலங்கு வானூர்தி நோட்டம்

(தென்மராட்சி)

சிறிலங்கா விமானப்படைக்கு சொந்தமான உலங்கு வானூர்தி ஒன்று நேற்று நண்பகல் 12 மணியளவில் சாவகச்சேரி பகுதியை சுற்றி நோட்டமிட்டுச் சென்றது. (86)

### வாதுவ

இன்று கப்பலில் இருந்து இறக்கப்பட்டு யாழ் பிரதான தபாலகத்திற்கு எடுத்து வரப்படவுள்ளன. இவை இன்றே தரம் பிரிக்கப்பட்டு நாளை விநியோகிக்கப்படவுள்ளதாக யாழ் பிரதான தபாலக வட்டாரங்கள் தெரிவித்தன.

(பா) (யோ)

### மண்கிண்டி

வேறொரு மண்டபத்தில் மண்கிண்டி முகாம் ஜனகபுர குடியேற்றத்தின் மாதிரி அமைப்பொன்று அமைக்கப் பட்டுள்ளது. வேறொரு இடத்தில் இராணுவத்தினரின் பிரதான தொலைத் தொடர்பு கட்டுப்பட்டறையின் மாதிரி அமைப்பு அமைக்கப் பட்டுள்ளது.

முகாமிற்கு முன்புறமாக போராளிகள் தாக்குதல் நடத்தும் காட்சி தத்ரூபமாக அமைக்கப்பட்டுள்ளது. முகாமின் மறுபுறத்தில் 'ஜனகபுர' குடியேற்றத்தின் மாதிரி அமைக்கப்பட்டுள்ளது.

## உள்வந்த வெளிச்சென்ற வாகன இலக்கங்கள்

### 23-08-93

எமது பதிவில் உள்ள கடைசி இலக்கம்: 10660

வடபகுதிக்கு உள்ளே வந்த வாகன இலக்கங்கள்:
26-8223, 41-8096, 28-3233, 28-1901, 27 6205, 26-3495, 26-7353, 22-3611, 26-3410, 42-1721, 41-8557, 27-2761, 24-4701, 26-0525, 24-2680, [illegible]3641, 41-9487, 28-1706.

வடபகுதிக்கு வெளியே சென்ற வாகன இலக்கங்கள்:
[illegible]8-1049, 22-8835, 24-4644.


தரமான இறைச்சி கிடைக்கவில்லை என்று கவலையா?

★ கவலையை விடுங்கள்.

இறைச்சிக்கான ஆடு, மாடு, கோழி என்பன மொத்தமாகவும் சில்லறையாகவும் விற்பனைக்கு உண்டு.

★ தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:-

1) த. பொ. மே. கழகத்தின் தென்மராட்சி, வடமராட்சி.
வலிகாமம் கோட்ட செயலகங்கள்:-
2) உதயம் பல்பொருள் அங்காடி
ஆரியகுளம் சந்தி, யாழ்ப்பாணம்.
3) தாயகம் விற்பனை நிலையம்
4) மொத்த விற்பனை நிலையம்
[ஆடியபாதம் வீதி, (பொற்பதி வீதிச் சந்தி)].

★ தரமான மாட்டிறைச்சி வற்றலை, மொத்தமாகவும், சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளலாம்,
தரமான மாட்டிறைச்சி வற்றல் கிலோ 160/- மட்டுமே.

நீங்கள் தவறாது நாடவேண்டிய இடம்:-

உதயம் பல்பொருள் அங்காடி
ஆரியகுளம் சந்தி — யாழ்ப்பாணம். [சி-7253]



இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி 31-ஆம் இலக்கத்திலுள்ள 'ஈழநாதம்' பணிமனையில் 1993-ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 24ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.